V2. No 35 5 Sep 1929

JL
189070

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No வெளாளர் தெரு,
பு...சபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 வரு செப்டம்பர் மீ 5உ [No. 35.

OFFICE ... MAD

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 681
2. அப்பர். (விஸ்தார கவி)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 683
3. சிந்தாமணி நீதிச்செய்புள்
V. பரமசிவன் 685
4. குலசேகரர் (பிறவி வேண்டுந் துறவி)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 687
5. வில்லிபாரதவிளக்கம் (இராசசூயச் சருக்கம்)
T. S. நடராஜபிள்ளை B.A., B.L. 688
6. திருவாய் மொழியின் திறம்
C. சுந்தரம் ஐயர் B. A. 690
7. தமிழ்ப் பாடம் (திருவரங்கத்துமாலை) 692
8. கம்பராமாயணம் (பூக்கொய் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 694
9. அகப்பொருள் வரலாறு (பரத்தையற் பிரிவு)
K. இராமரத்நம் ஐயர் B. A. 695
10. வர்த்தமானம் 699

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

189070

கலாநிலயம்

கல்சரும் கவிதையும்.

VI

உபயோகம் என்பதன் உண்மையான உட்கருத்து யாதென முன்னோர் உரைத்தனம். மண் பொன் பெண்ணாசையால் பேதுற்று மயங்கும் மனம், அவைகளை வைத்தாளவேண்டுமெனும் சுயநல சிந்தனைக்குத் துணைநிற்கின்ற வொன்றை உபயோகமுள்ளதென விவகரித்தல் நெய்கொண்டு நெருப்பவிக்க நினைத்தலே போலாம். உபயோகமுள்ளவென வுலகம் இந்நாள் இல்வாழ்க்கையிலும் சர்வகலாசாலைகளிலும் சட்டசபைகளிலும், மகாநாடுகளிலும் வற்புறுத்திக் காட்டுமவை, பெரும்பாலும் மமதையின் தலைவிரிகோலக் காட்சியேயாகும். இந்நிலையிற்றான் கவிதையின் அவசியம் அளவிறந்ததாகின்றது. ஏனெனில், கவிதா சக்தியின் கருமம் இருவகைத்து. ஒன்றினால் நமது, அறிவிற்கும் ஆட்சிக்கும் இன்பத்திற்கும் இயன்ற சாதனங்களை அமைத்துத் தருகின்றது. மற்றதால், அச்சாதனங்களும், அவைகளைத் தழுவியுள்ள விஷயங்கள் யாவும், ஒற்றுமையும் ஒழுங்கும் உடையனவாய் நிகழவேண்டும் என்னுமொரு ஆர்வத்தை நாம் அடைகின்றோம். இவ்வொற்றுமையும் ஒழுங்குந்தான் அழகென்றும் அறமென்றும் பெயர்பெறுகின்றன. இவ்வழகிற்கும் அறத்திற்கும் எதிராய சுயநயக்கொள்கையால் கணக் கெண்ணியெண்ணிக் குவிக்கப்படும் புறவாழ்க்கைக்குரிய சாதனங்கள் அளவு கடந்துவிடவே, பண்படா மானுடமனம் அவைகளை நீதிவழுவா நெறிமுறையில் ஓர்ந்து ஏற்றுக்கொள்ளும் வகையற்றதாய்த் தவிக்கலாகின்றது. எனின், ஒன்றினிற்கு ஒன்று இந்நிகிலப் பொருள்களின்பால் இருக்கின்ற தொடர்பினையும் ஒற்றுமையையும் பிழையாமல் காத்து, அணுவும் அண்டமும் அளவினாலன்றித் தன்மையால் வேறுபடா வாய்மையை வற்புறுத்தும் மனோபாவம் ஒன்றே உலகத்தோ டொருவனை ஒத்து வாழவைக்க வல்லதாகையால் சுயநயமென்ற விஷத்திற்கு மருந்து கவிதையல்லால் பிறிதொன்றில்லை. குணத்தையே கருதுவார் அளவினை ஒரு பொருளென உன்னார்; எனின் அவ்வேற்றுமையும் அற்றொழிகின்றது. இவ்வுலகத்தை அலைத்தழிக்கும் பேய் மமதை ; காத்தளிக்கும் கடவுளோ கவிதை.

கவிதைதான் திப்பியத் தூய்மை வாய்ந்தது. அறிவின் நடுவும் அது, எல்லையும் அதுவே. எல்லாச் சாத்திரங்களின் உண்மையையும் உய்த்துணரவல்லது கவிதை. மற்றெத்திறத்து எண்ணங்களுக்கும் ஆணிவேராவதன்றி அலர்கின்ற மலராவதும் அதுவே.

3L
m21, N27KN
N29.285

எல்லாம் விளைவது கவிதையினின்று, விளைந்த எல்லாவற்றையும் அலங்கரிப்பதுங் கவிதை. ஒருவனது வாழ்க்கையின் கவிதை நசிக்குமாயின், வித்தும் விளைகனியும் இரண்டுமே இனி இல்லவாம். நிலமும் மலடாக, வாழ்க்கையெனும் விருக்ஷமினிக் கிளைத்தோங்கி வளர்வதற்கு வழியில்லை. மலரிற்கு மணமும் கனிக்குத் தீஞ்சுவையும் உறுப்பிற்கு வடிவும்போல், உலகப் பொருள் அனைத்தையும் உபயோகமாக்குவதும் இக் கவிதையே. குறிப்பும் பேரேடுமாய்க் கூனிக்கிடக்கும் கூகைகள் ஒருபோதும் உயர்தற்கியலா அவ் விண்தலத்தினின்று பேரொளியும் தண்ணளியும் கவிதைதான் கொணரவில்லையெனின், பின் அறங்களும் அன்பும் தேசபக்தியும் நட்பும் இவையெல்லாம் என்னும்!— இவ்வழகிய அவனியின் இயற்கைவளங்களெல்லாம் என்னும்—இடுகாட்டிற்கப் புறத்தில் நாம்கண்ட நன்மையென்ன, எதைக்கொண்டு ஆறுவோம்—அதனிற் கப்புறத்தில் நாம் அடைதற்கு விழையும் நற்கதி ஏதேன்று எண்ணுவோம்! இவைகளை நினைவில் வைத்துக் கவிதையிற் பெரிய கம்பர்,

> ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
> ஆகும் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
> சாகந் தழைத்தன் பருப்பித்தரு மம்ம லர்ந்து
> போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே

என்று பாடியதின் உட்கருத்தை உன்னியுன்னி அனுபவிக்குங்கால் அதன் அருமை தெரியவரும். பள்ளிக்கூடப் பிள்ளைகளைப்போல் கட்டுரை எழுதப் பயில்வார் கைக்கெட்டிய ஒரு கவியன்று அது—உலகம் உய்வதற்கு உற்றதோர் உபதேசம்.

மனோபாவத்திற் சிறந்த கம்பருக்கும் இப்பாசுரம் தோன்றிய செவ்வி சிறந்ததா யிருத்தல்வேண்டும். இன்பமயமாய உத்தம நிலையடைந்த மாபெரும் மனத்தவர்களுக்கு இன்பத்துள் இன்பமாய் உத்தமத்தி லுத்தமமாய்க் கருதவல்ல வேளைகளில் உதிக்கின்ற உண்மைகளே காவியங்களாகின்றன. சிற்சில சமயங்களில் எவ்வெந்த அளவு பயிற்சியுற்றிருக்கின்ற மனத்திலும் அவ்வந்த நிலைக்கேற்ற எண்ணங்கள் தோன்றித் தோன்றி மின்னலென மறைவது இயற்கை. இமைக்கும் நேரமும் அமையாது அகல்வதால் அதன் தன்மையை ஓர்ந்துகொள்ள இயல்வதில்லை. எனினும் அத்தோற்றத்தால் விளைந்த பயனே, அது மறைவதோடு முற்றிலும் அழிந்துவிடுவதும் இல்லை. கவிதா சக்தியுள்ளவர்களுங் கிவ்வெண்ணங்கள் அடிக்கடி கிளர்கின்றன; மற்றவர்களைக்காட்டிலு மதிகநேரம் நிகழவும் நிகழ்கின்றன. ஆதலால் அவர்கள் அதன் தன்மையையும் பயனையும் உணரவல்லவராகின்றனர். அவ்வுணர்ச்சியைத் தக்கமொழிகளால் உரைக்கும் ஆற்றலும் அவர்களுக்குளது. இவ்வாறு அவர் உரைசெய்த மொழிகளில் நாம் நன்குபழகிவருவோமாயின் நம்மிடத்து உதிக்கின்ற எண்ணங்களின் தன்மையையும் பயனையும் ஒரு நொடிக்குள் தேர்ந்துகொள்ளக் கூடியவ ராவோம். சொல்லத் தெரியாத காரணத்தால் பல சிந்தனைகள் பயனற்றுப் போகின்றன. கவிகளின் மொழிகளைக் கற்றிருந்தக்கால் சொல்லில்லாக் குறைபற்றி நமது எண்ணங்கள் சோரவேண்டா. சொல்லவேண்டும் என்னும் முயற்சியும், அச்சொற்களால் அவை நம்மிடத்து நிலைநிற்கவேண்டுமெனும் ஆசையும் உளதாயின், சொல்வன்மை இன்மையால் அவ்வெண்ணங்கள் தங்காமற்போனவிடத்தும், "நன்றாக நாம் தேர்வதன்முன், உணர்ந்தது சிறிதேனும் அதனை உரைப்பதற்கு முன்னமே, உதித்த எண்ணங்கள் மறைந்தனவே" என்று நாம் வருந்தலாவோமெனினும் அவ்வருத்தத்திலேயே இன்பம் பெரிதுளது. அவ்வாறு வருந்தவேனும் கற்போமாயின் கவிதைக்கு நாம் அண்மைய ராகின்றோம்.

இத்தகைய நினைவுகள்தாம் தெய்வத்திருவுள்ளம் நம்மூடு உருவிச்செல்லும் செவ்வியால் நேர்பவை. நுண்ணுணர்வும் நல்ல மனோபாவமும் உடையவரிச் செவ்வியைப் பெறுதற்குப் பெரிதும் பாத்திர ராகின்றனர். இந்நிலை எய்திய மனது இழிவுடைய நசையையெல்லாம் இகலி நிற்கின்றது. அறம், அன்பு, தேசபக்தி, நட்பு முதலியவைகளுக்குரிய ஊக்கங்களின் தொடர்பை அத்தகைய மனநிலையில் நன்கு காணலாம். இப்பொழுதே 'நான்' என்னும் நினைவு, அண்டத்துளோ ரணுவாய் அளவழிந்தொழிகின்றது. கவிஞர் இவ்வித அநுபவத்திற்கு ஆளாகின்றபோது, முன்னே நாம் உரைத்தவண்ணம், தனித்தனியாகத் தோன்றிய எண்ணங்களையெல்லாம் தொகுத்து அத்தொகுதியால் எய்துகின்ற முடிவிற்குத் தம்முடைய தெய்விகத் தன்மையை அளித்து, மண்ணுலக மாயைநின்றும் நிரந்தரமாயதாய்த் தாம் கற்பிக்கும் ஓர் ஆன்மவுலகத்தினது ஆட்சிகொண்டு நம்மனோரைப் பரிவினோடும் அங்குக் குடியேற்றுகின்றனர். இன்னபடி கவிதையானது, இவ்வுலகத்தில் சிறப்பும் அழகும் உற்றுத் திகழ்வனயாவற்றையும், அவ்வுலகத்திற்குச் சிரஞ்சீவியாக்கித் தருகின்றது. வந்துவந்து மறைகின்ற திவ்விய எண்ணங்களைப் பிடித்துநிறுத்தித் தம்முடைய கலைகளால் அவைகளை அலங்கரித்து மக்களுக்கிடையே நடமாடவிடுவது கவிதையாகையால் கடவுளின்கருத்துத் தெரிவுறச் செய்யுஞ்சக்தி அதனிற்கு உளதென்று உணரல் வேண்டும். கடவுளின் கருத்து இவ்விதம் உருவெடுத்து நடமாடுங்காலையில் பயன்தெரிவார் சிலர், அவைகளைத் தம்மினமாய்த் தேர்ந்து கொள்ளலுங் கூடும். ஆதலின், மாந்தர்பால் அவ்வப்போது உதிக்கின்ற தெய்விக உணர்வு நசிக்காமல் காத்து வைப்பது கவிதை.

ஏனெனில் கவிதை, எல்லாவற்றையும் காமுறும் வனப்புடையன வாக்கிவிடுகின்றது. அழகற்றதை அழகாக்கி, அழகுள்ளதற்குப் பின்னுமழகுசெய்து தருவதுமல்லாமல், கவிதையின் அங்கமாய மனோபாவம், பயம் துணிவு, இன்பம் துன்பம், நித்தியம் அநித்தியம் என்னு, மிவைபோன்ற முரணுடையவைகளையும் ஒன்றுபட மருவ வைக்கின்றது. கவிதை புரியுமோர் இரகசியமான இரசவாதத்தால் மாற்றற்றபொன்னாக மாறுததொன்று இவ்வுலகிலில்லை. மெய்ந்நெறி நன்மையன் ஆய கடவுள் இவ்வகையில், யாவும் உயர்வடைந்து வேற்றுமையற்ற தாகவேண்டுமென்று விதித்திருக்கின்றார். அவ்விதியை நமக்குப் போதித்துத் தருவதுமல்லாமல் அதன்படி நம்முடைய வாழ்க்கை நடப்பதற்குச் சடங்குகாட்டும் அந்தணர்களும் கவிகளே. போதிக்கும் அவர் நெறியினை நினைத்து, காட்டுமச் சடங்கிற் கிணங்கி, நம் கருமத்தைச்செய்து வருவோமாயின் அழகும் அறமும் அன்பும் அழைத்தவிடந்தோறும் வந்துநின்று உதவாவோ. இவைகளின் உதவிதானுண்டெனில் சட்டதிட்டங்களும் சமூகத் திருத்தமும் வேண்டுமோ. மற்று, அவையின்றி இவைதான் பயன்பட்டவோ; பல்லாண்டு முயன்றாலும் பயன் படுமோ. ஓட்டுச் சீட்டிற்குக் கையைநீட்டாமல் உலகத்திற்குச் சட்டம் விதிக்கின்ற அங்கத்தினர் இக்கவிஞர்க ளாவர்.

இப்பொழுது, நாம் ஜூலைமாதத்து இதழ்கள் நான்கிலும் "கல்சரினவசியம்" என்ற தலைப்பின்கீழ் வரைந்த நான்கு தலையங்கங்களில் குறித்த பொருள்களை மனத்திற்கொண்டால், கல்சருக்கும் கவிதைக்குமுள்ள தொடர்பு நன்கு புலப்படும். தன்னுடைய இஷ்டத்தையேனும் பிறருடைய இஷ்டத்தையேனும் நடத்திவைக்க முற்படுவதின்றிக் கடவுளி னிஷ்டத்தைத் தேர்ந்துகொண்டு, அதுவே உலகத்தில் முட்டிலாது நடைபெற்றிடுமாறு புரிவது ஒன்றே கல்சரின் கருமமாகும் என்றும், அக்கருமத் தினளவிலேயே இருள் நீங்கி இன்பம் எங்கெங்கும் இயங்குவதாகும் எனவும், அவ்வரிசைத் தலையங்கங்களில் ஆதாரங்களுடன் காட்டினோம். அத்தகையதோர் கருமத்தைச் செய்வதற்கொத்த தன்மையையடைவதும் மனத்திற்குரிய பயிற்சியினால் ஆவதேயன்றி, வாயால் விதிப்பதோடு அமையாது என்பதையும் வற்புறுத்தினோம். கலை, கவிதை மனோபாவம்பகுத்தறிவு என்பவைகளின் இலக்கணங்களையும், அவை ஒன்றோடொன்றும் நம் வாழ்க்கையிற் கலந்து பயிலுமாறும், "கல்சரும் கவிதையும்" என்னு மித்தலையங்கங்களில் காட்டப்பெற்றன. இவைகளினின்று, அக் கல்சர்நிலை அடைவதற்குரிய சாதனமாய்க் கவிதையின் கருவூலமாங் காவியங்கள் அமைகின்ற பெருமையை எளிதில் உணரலாமே.

OFFICE OF THE REGIST... 1929 MADRAS

அப்பர்

5. அப்பர் கவித்திறம்.

1. கவிகளின் பகுதிகளும், அவற்றுள் அப்பர் உரிமையும்.

விஸ்தார கவியின் வகுப்புக்கள்

விஸ்தாரகவி இருவகைத்தென்றும் அவை முறையே தனிப்பா, தொடர்நிலை யென்றாகுமெனவும் கூறினோம். தனிப்பா வென்பது ஓரே பாட்டாயிருக்கலாம். பத்துப்பாட்டில் ஒவ்வொன்றும் அகலகவி யென்னலாகும். அவ்வாறே தனிப்பாவாயிராமல், தொடர்நிலையாயின் அவை முடிவற்ற வேறுபாடுகளுடையன வென்பதும் மொழிந்தோம். அவற்றுள் மிக்க சிறப்புப்பெற்று விளங்கும் வகுப்பு ஐம்பத்தைந்தெனப் புலவர் தொகுத்தனர். அவையும் அவைபோன்ற பிறவும் தொடர்நிலைச்செய்யுட்களாம்:—

665 பக்கத் தொடர்ச்சி

> பிள்ளைக் கவிமேற் கொள்ளும் கலம்பகம்
> பன்மணி மாலை மும்மணிக் கோவை
> அகப்பொருட் கோவை தொகைப்படு செய்யுள்
> இணைமணி மாலை யிரட்டைமணி மாலை
> மும்மணி மாலை நான்மணி மாலை
> யிருபா விருபஃ தெருபா வொருபஃ
> தொலியந் தாதி மலிபுக ழின்னிசை
> வருக்க மாலை திருத்தகு கைக்கிளை
> மங்கல வள்ளை மற்றை யிரட்டை
> நற்கீர்த்தி நேரிசை மெய்க்கீர்த்தி மாலை
> காப்பு மாலை வேனின் மாலை
> பல்சந்த மாலை யங்க மாலை
> வசந்த மாலை நவமணி மாலை
> பரணி தசாங்கப் பத்திரு பகுதிய
> பதிற்றந் தாதி நூற்றந் தாதி
> யட்ட மங்கல மலங்கார பஞ்சகம்
> ஊசல் சின்னப் பூவொரு பொருண்மேற்
> பேசும் சதகம் பிறவெண் ணானுங்
> கூறுத லைந்திணைக் கோவை யுற்ற
> நாழிகை வெண்பா நானாற் பதனோ
> டியாழின் மொழிவிழி யிணைமுலைப் பத்து
> வில்வாள் வேல்கோல் வேழங் குதிரை
> நாநீர் கொடையை நயந்த விருத்த
> மாப்பெரும் புலவர்சொல் காப்பிய மென்னப்
> பெயர்பெறுந் தொடர்நிலை பிறவு மன்ன"

என்றார் வைத்தியநாததேசிகர். இனி, பிள்ளைக் கவிமுதல்பெருங்காப்பியமீறாக வுள்ள அகலகவி வகுப்புக்களில் அப்பர் தேவாரம் எவ்வெவற்றின் இலக்கணங்கள் அமைந்துள்ளதென்பதை ஆராய்வோம்:—

I. பிள்ளைக்கவியில் தேவாரம் சேராது. ஏனெனில் இக்கடவுளுக்குப் பிறப்பு வளர்ச்சி முதலியன காணப்படா. ஊழிக்காலத்தின் முடிவில்

> பெருங்கடன்மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போ
> யிருங்கடன்மூடி யிறக்கு மிறந்தான் களேபரமுங்
> கருங்கடன் வண்ணன் களேபரமுங்கொண்டு கங்காளராய்
> வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே
>
> தனித்திருவிருத்தம் 7.

இப்பெருமான் இலக்கணம்,

> முழுத்தழன் மேனித் தவளப்பொடியன் கனகக்குன்றத்
> தெழிற்பெருஞ் சோதியை யெங்கள்பிரானை யிகழ்ந்திர் [கண்டீர்
> தொழப்படுந்தேவர் தொழப்படுவானைத் தொழுதபின்னைத்
> தொழப்படுந்தேவர் தம்மாற் றொழுவிக்குந்தன் றொண்டரை [யே
>
> —ஷை—5

ஆகையால் தொழப்படும் இப்பரம்பொருளடியார் பெண்தன்மை யேற்று அகப்பெருட்டுறைகளிற் பாடுவதால் பெண்பிறப்புக்குரிய ஊசல் முதலியன உருவகத்தில் அமையலாகும். அப்பர் தேவாரத்தில் ஊசலாடுவதை வர்ணிப்பது காண்க:—

> உறுகயி றூசல் போல வொன்றுவிட் டொன்று பற்றி
> மறுகயி றூசல் போல வந்துவந் துலவு நெஞ்சம்
> பெறுகயி றூசல்போலப் பிறைபுல்கு சடையாய்பாதத்
> தறுகயி றூச லானே னதிகைவீ ரட்ட னீரே.
>
> திருவதிகை திருவீரட்டானம் - திருநேரிசை 6.

ஆசைவன் பாச மெய்தி யங்குற்றே னிங்குற் றேனு
னூசலாட் டுண்டு வாளா வுழந்துநா னுழித ராமே
தேசனே தேச மூர்த்தி திருமறைக் காடு மேய
வீசனே யுன்றன் பாத மேத்துமா றருளெம் மானே

தனி - திருநேரிசை 8.

II. கலம்பகம், பன்மணிமாலை, மும்மணிக்கோவை யென்னும் இவ்வகுப்புக்களில் தேவாரம் வாரா.

III. அகப்பொருட்கோவை:—இதன் இலக்கணம்:-

முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருண்
களவு கற்பெனும் வரைவுடைத் தாகி [முகந்து
நலனுறு கலித்துறை நானூ றுக
ஆறிரண் டுறப்பு மூறின்றி விளங்கக்
கூறுவ தகப்பொருட் கோவை யாகும்.

இவ்விலக்கணங்களில் நானூறு கட்டளைக் கலித்துறைகள் அகப்பொருட் கோவைக்கு இன்றியமையா விலக்கணமென்றார். அப்பர் முதல் திருமுறை 4-ம் திருமுறைகளில் திருவிருத்தங்கள் 35 பதிகங்களைக் காண்கின்றோம். இவர் தேவாரத்தில் பலபதிகங்கள் வான்மீகத்திற்கு உணவாயினவால், அவற்றுள் ஐந்து திருப்பதிகங்கள் கட்டளைக்கலித்துறைக ளென்று (திருவிருத்தங்களென்று) நாம் அநுமானிக்கலாமென்றால், அப்பர் திருவிருத்தத் தொகுதியே ஒருவித அகப்பொருட் கோவையென்று கூறலாகும். ஏனெனில் இவற்றுள் இருவகைப்பட்ட முதற்பொருளும் பதினன்கு வகைப்பட்ட கருப்பொருளும், பத்து வகைப்பட்ட உரிப்பொருளும் பொருந்திக் கைக்கிளை முதலுற்ற அன்புடைக்காமப் பகுதியாங் களவொழுக்கத்திணையும், கூறுதலே எல்லையாகக் கொண்டு விளங்கும். திணைமுதலாகத் துறை ஈறுகக் கூறப்பட்ட பன்னிரண்டு அகப்பாட்டுறுப்பும் வழுவின்றித்தோன்ற அப்பர் திருவிருத்தங்கள் பாடப்பட்டன. ஆயினும் ஒவ்வொரு பொருளும் திணையும் துறையும் ஒழுக்கமும் சிவபெருமான் ஒளியிற் கலந்து விளங்குவதே, அப்பர் அகப்பொருட்கோவையிலக்கணமாம்:—

முதற்பொருள்

(i) நிலம்:— ஐந்திணையாய் வகுக்கப்பட்ட நமது பூமி முற்காலத்தில் திணைவேறுபாடதாய், திணைக்குத் தனித்தனி தெய்வ மிருந்தும், திருநெறியால் ஐந்திணைமாந்தரும் ஐக்கியப்பட்டுச் சிவபெருமானை வணங்கலாயினர்.

''உடலு முயிருமோருவழிச் செல்லு முலகத்துள்ளே
யடையு முனை வந்தடைந்தார்''

(திருக்கழுமலம் - திருவிருத்தம் 8)

ஆகையால் இத்தகைய நிலத்தின் இலக்கணம்:—

கண்]

பொன்னொத்த மேனிமேல் வெண்ணீறணிந்து புரிசடைக்
மின்னொத் திலங்கப் பலிதேர்ந் துழலும் விடங்க வேடச்
சின்னத்தி ஞன்மலி தில்லையுட் சிற்றம் பலத்து நட்ட
மென்னத்த ஞடல்கண் டின்புற்றதால்வ் விருநிலமே

கோயில்திருவிருத்தம்-பண்-கொல்லி 9.

(ii) பொழுது:—பொழுது இருவகை யென்பர். அவை பெரும்பொழுது, சிறுபொழு தெனப்படும். ஓருவருடத்தை ஆறுபாகமாக்கி, சித்திரைமுதல் பங்குனி ஈறுக இரண்டிரண்டு மாதங்களை முறையே, இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி யென்னும் அறுவகைப் பெரும்பொழுதாக்கினர். தேவதினத்தை ஆறுபகுதிகளாக்கியதுபோல், மக்கள் திவசமொன்றை அறுகூறுக்கிக் காலை நண்பகல் எற்பாடு மாலை யாமம் வைகறையென அறுவகைச் சிறுபொழுதும் வகுத்தனர் மேலோர். எம்பெருமானைப் ''பேசாத நாளெல்லாம் பிறவாநாளே'' என்றதற்கிணங்க, எவ்வகைப் பொழுதை யெடுத்துக்காட்டினும்,அதில் திருத்தொண்டின் மகிமையே விளங்கும்:-

காலை

காலையெழுந்து கடிமலர் தூயன தாங்கொணர்ந்து
மேலை யமரர் விரும்புமிடம் விரையான் மலிந்த
சோலை மணங்கமழ் சோற்றுத் துறையுறை வார்சடை
மாலை மதியமன்றே யெம்பிரானுக் கழகியதே [மேல்

திருச்சோற்றுத்துறை-திருவிருத்தம் 1

நண்பகல்

[துன்னும்
சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித்தொண்டர்
நிழலா வனவென்று நீங்காப் பிறவி நிலைகெடுத்துக்
கழலா வினைகள் கழற்றுவகா லவனங்கள் தந்த
வழலா ரொளியன காண்க வையாற னடித்தலமே.

திருவையாறு—திருவிருத்தம் 9.

எற்பாடு

திரைவாய்ப் பெருங்கடன் முத்தங்குவிப்ப முகந்துகொண்டு
நுரைவாய் நுளைச்சிய ரோடிக்கழுமலத் துள்ளழுந்தும்
விரைவாய் நறுமலர் சூடிய விண்ணவன் றன்னடிக்கே
வரையாப் பரிசிவை நாடொறு நந்தம்மை யாள்வனவே.

திருக்கழுமலம் - திருவிருத்தம் 3.

மாலை

அங்கட் கடுக்கைக்கு முல்லைப் புறவ முறுவல்செய்யும்
பைங்கட் டலைக்குச் சுடலைக் களரிப் பருமணிசேர்
கங்கைக்கு வேலை யரவுக்குப் புற்றுக் கலைநிரம்பாத்
திங்கட்கு வானந் திருவொற்றியூரர் திருமுடியே.

திருவொற்றியூர் - திருவிருத்தம் 10

யாமம்

செஞ்சுடர்ச் சோதிப் பவளத் திரடிகழ் முத்தனைய
நஞ்சணி கண்டனல் லூருறை நம்பனை நானொருகாற்
றுஞ்சிடைக்கண்டு கனவின் றலைத்தொழு தேற்கவன்றன்
னெஞ்சிடை நின்றக லான்பல காலமு நின்றனனே

திருநல்லூர் - திருவிருத்தம் 4.

வைகறை

வானவர் தானவர் வைகன் மலர்கொணர்ந் திட்டிறைஞ்சித்
தானவர் மால்பிர மன்னறி யாத தகைமையினன்
ஆனவ ஞதி புராணனன் றேடிய பன்றியெய்த
கானவனைக் கண்டியூ ரண்ட வாணர் தொழுகின்றதே

திருக்கண்டியூர் - திருவிருத்தம் 1.

இனி, பெரும்பொழுதுகளிற் சில நோக்குவோம்.

இளவேனில்

மாசிலொள் வாள்போல் மறியு மணிநீர்த் திரைத்தொகுதி
ஊசலை யாடி வொண்காற் சிறகன்ன முறங்கலுற்றால்
பாசறை நீலம் பருகிய வண்டுபண் பாடல்கண்டு
வீசுங் கெடில வடகரைத்தே யெங்கள் வீரட்டமே.

கூதிர்க்காலம்

பைங்காற் றவளை பறைகொட்டப் பாசிலை நீர்ப்படுக
ரைங்காற் குவளைமே லூலாவி யுயிர்ப்ப வருகுலவும்
செங்காற் குருகிவை சேருஞ் செறிகெடி லக்கரைத்தே
வெங்காற் குருசிலை வீர னருள்வைத்த வீரட்டமே.

பின்பனிக் காலம்

படர்பொற் சடையும் பருவா யரவும் பனிமதியும்
சுடலைப் பொடியு மெல்லாமுளவே யவர்தூய தெண்ணீர்க்
கெடிலக் கரைத்திரு வீரட்டாவர் கெட்டேனடைந்தார்
நடலைக்கு நற்றுணையாகும் கண்டீரவர் நாமங்களே.

திருவதிகைத் திருவிருத்தம், 1, 2, 6

சிந்தாமணி நீதிச் செய்யுள்

667 பக்கத் தொடர்ச்சி

''பொருணின்ற பெற்றியைப் பொய்யின் றுணர்தல், மருளறு நன்ஞான மாண்பு'' என்ற மூதுரைதன் உதவிகொண்டு நன்ஞானமென்ப தின்னதென் றுணர்க. ''எட்டுவகை யுறுப்பிற்றுகி இயன்றது கட்டிய நற்காட்சி காண்'' என்ற உரைகொண்டு நற்காட்சி எட்டுறுப்பினை உடைத்தென்பது பெற்றும். அவை ஐயமின்மை, அவாவின்மை, உவர்ப்பின்மை, மயக்கமின்மை, அறப்பழிநீக்கல், அழிந்தாரைத்தாங்கல் அறத்திற்கு அளவளவு, அறத்தை விளக்கல் என்பனவாகும். தீவினை என்னுமிருள் கெடற்கு நற்காட்சியும் நன்ஞானமும், நல்லொழுக்கமும் பெருந்துணையாகு மென்பதனைக் கீழ்வருஉஞ் சிந்தாமணிச் செய்யுளா லறிக.

தெருள லேன்செய்த தீவி னையெனு
மிருள்வி லங்கநின் றெரியு நீள்சுட
ரருளு மின்னெனக் கடிக ளென்றனன்
மருள் விலங்கிய மன்னர் மன்னனே.

[அடிகளே! பிறப்புறுமாற்றை அறியாதேனுய எனக்குத் தீவினையென்னு மிருள்கெட்டொழியுமாறு ஞானத்தை அருளுக, என்று மன்னன் கூறினன்]

எண்ணிய வெண்ணா மெல்லா
மிறப்புமேற் பிறப்புக் காசை
பண்ணியென் னறிவை யெல்லாம்
பாழாக்கி யெனைப்பா ழாக்கும்
திண்ணிய வினையைக் கொன்று
சிறியனை யுய்யக் கொண்டாற்
புண்ணிய நினக்கே யன்றோ
பூரணா னந்த வாழ்வே

என்ற தாயுமானுர் வாய்மையும் மேலே குறித்த சிந்தாமணிச் செய்யுளும் ஒப்பு நோக்கற்பாலதாம்.

அறிவினுற் பெரிய நீரா
ரருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி யின்ப
நிறைகட லகத்து நின்றார்
பொறியெனும் பெயரா வைவாய்ப்
பொங்கழ லரவின் கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார்
வேதனைக் கடலு ணின்றார்.

[அறிவினு லுயர்ந்த தன்மையினையுடையார் அரிதாகிய வினை (தீவினை) கழிதற்கேதுவாகிய ஞான நெறியைச்சேர்ந்து இன்பக்கடலுள் நின்றார்; உடம்பென்ற பாம்பிடத்துப் பொறியெனும் பெயரினையுடைய ஐந்து வாய்களினிடத்து உண்டாகும் இன்பவிஷயங்களிலே காதலாகி நின்றார் துன்ப ஆழியில் நின்றார்.]

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக் - கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்

[உடம்பு, வாய், கண், மூக்கு, காது என்ற பேரினையுடையதாகிய ஐவாய-ஐந்து வழிகளையுடைய, கைவாய்-தவவொழுக்கத்தில், விலங்காது - தவறாது]

என்ற நாலடிக்கருத்தும் சிந்தாமணிக் கருத்தும் ஒப்பு நோக்கற்பாலதாம். வீடுபயக்கு முணர்வினைப் பெறுதலின் காரணமாய நிலையாமை யுணர்தலும், அந்நிலையாமை யுணர்வின்பயனுல் துறவுபூணுதலும் அத்துறவின் வழித்தாய் மெய்யுணர்தலும், அம்மெய்ப்பொருளுணர்வான் அவாவறுத்தலும் செய்தாரே அறிவினுற் பெரியநீரார். இந்நீர்மையாளர்க்குத் துன்பமிலதென்பதனை ''அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்'' (368) என்ற குறட்கருத்தானும்,

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

[நிறையாத தன்மையினை யுடைத்தாகிய ஆசைதனை விடின் அப்பொழுதே அழியாத தன்மையினை அது தரும்] என்ற (370) வாய்மையானும், அவா நீப்பின் உயிர் தனது மெய்யுருவைப் பெறும் என்பதையும் காண்க. ''ஆசைக்கோ ரளவில்லை'' என்ற தாயுமானுர் கருத்தினை, ''ஆரா வியற்கை அவா'' என்ற வள்ளுவர் வாய்மைபைக்கொண்டு இன்புறுக.

உள்ளமுடை யான்முயற்சி செய்யவொரு நாளே
வெள்ளநிதி வீழும்விளை யாததனி னில்லை
தொள்ளையுளார் வின்னவர்கள் சொல்லின்மடி கிற்பி
னெள்ளுநர்கட் கேக்கமுத்தம் போலவினி தன்றே.

[மனக்கிளர்ச்சி உடையான் முயற்சிசெய்ய ஒரேநாளில் பெரும்பொருள் கிடைக்கும். அம்முயற்சியான் விளையாதது ஒன்றுமில்லை. புரைபட்ட உணர்வினை யுடையார்கள் அது நிலையற்றது என்று சொல்லி மடிந்திருந்தால் தம்மை இகழும் பகைவர்கட்கோர் தலையெடுப்புப் பெற்றுலொப்ப இனியதாகும்]

வினைசெய்தற்கண் மனமெலிவின்மையே முதற்கண் வேண்டுவதொன்றும். அதன் பின்றை, கருமஞ் செய்யுங்காற் சோம்புதலிலாமை வேண்டும். பிறகு இடைவிடாத மெய்ம்முயற்சி இன்றியமையாதது. இந்நீர்மையினுர், ''ஊழையு முப்பக்கங் காண்பர்'' என்பது வள்ளுவர் மதம். ''முயற்றின்மை யின்மை புகுத்திவிடும்.'' அவ்வின்மையான் 'பேராண்மை மாயும்'' என்பது சில்லோர் கொள்கை.

''தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்''

[உயர்ந்த முயற்சியானது அளித்தது தெளிந்த நீரைப் போன்ற அடுபுற்கையே யானுலும் அதனை உண்ணுவதினுமினிய தொன்றிலது]

என்ற கொள்கையினை யுடையார் மேற்குறித்த கோட்பாட்டினுக்குச் சிறிது முரணி நிற்றல் காண்க.

இடுக்கண்வந் துற்ற காலை எரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றுனு மின்றி நகுகதா நக்க போழ்தவ்
விடுக்கணை யரியு மெஃகா மிருந்தழு தியாவ ருய்ந்தார்
வடிப்படுத் தென்னை யாண்மை வருபவந் துறுங்க

[என்றே.

[துன்பம் வந்தெய்திய போழ்து எரிவதோர் விளக்குப் போல் நடுக்கஞ் சிறிது மில்லாது மகிழ்க. அன்னணம் மகிழ்ந்தபோழ்து அவ்விடுக்கணை அரிவதோர் படையாகும். (அவ்விடுக்கணுக்காக) வருந்தி அழுது எவர் பிழைத்தார். ஆகவே ஆண்மையை வடுப்படுத்துவது என்னே ?வருவன வந்தே தீரும்.]

இவ்வறுசீர் ஆசிரிய விருத்தத்தின்கண்

இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்

[துன்பம் வரும்போழ்து அதற்கு வருந்தாது நகுக. அத்துன்பத்தினை மேன்மேலடரவல்லது அம்மகிழ்ச்சிபோல்வது பிறிதில்லை யாகலின்]

என்ற குறட்கருத் தமைந்திருத்தல் காண்க. "இடுக்கண் வருங்கா னகு"தல் எத்தகைபோருக்கு இயலுவதென்பதை வள்ளுவர் அவ்வதிகாரத்தி னகத்தே

இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன்.

[துன்பத்தை விரும்பாது துன்பம அடைதல் இயல்பெனக் கருதுபவன் துன்பமுறான்] எனக் காட்டியுள்ளார். இதனான் இவ்விலக்கணத்தை யுடையானுக்கு இன்பமும் துன்பமும் இல்லை. ஒரு மனிதன் "இன்பம் வேண்டும் இன்பம் வேண்டும்" என அல்லும் பகலும் அரற்றுநிற்கின்றானெனக் கொள்வோம். அன்னனாம் அவன் சொல்லும் போழ்தத்து நிலைதனை நினைப்போமாயின் அன்னான் இன்பத்தை விழைதற்குரிய காரணத்தைப் பெறுவோம். இன்பத்தை விழையுமவன் துன்பத்தை வெறுக்கின்றானென்பது பெறும். அவ்வாறு துன்பத்தைக் கடிகின்றவன் எக்காரணங் கொண்டவ்வாறு கருதுகின்றானென்பதைக் கருதுங்காலென்னைபெறுதுமெனின் இடுக்கட்போழ்தும் இன்பமெய்தும் பெற்றிதனை அன்னான் பெற்றிலன் என்பதேயாகும். இக் காந்தருவதத்தையா ரிலம்பகத்தே "இடுக்கண்வந்து" என்ற செய்யுட்குப்பின் எழுபதாவது செய்யுளாக

"துன்ப முற்றவர்க்கலா லின்பமில்லை யாதலின்"

என்பதால் இது காணப்படுகிறது. இக்கருத்தினை உறுதிபடுத்தற்கு அமைந்ததுபோல் நால்வர் நான் மணிமாலையி லோர்செய்யுள் திகழுறலுங் காண்க.

ஊர்ந்து வருமிள வேறுடை யான்ற னுளத்தருளாற்
சார்ந்துசமண்வீட் டுறுமுனக்கேவருஞ் சைவநலங்
கூர்ந்து மிளிர்தரு நாவரசேநல் குரவுமுனஞ்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ் செல்வமே

ஈண்டுள்ள செய்யுட் கருத்துப்படி, துன்புறற்குக் காரணம் யாதெனவும் பின்பு அவன் இன்புறற்கு இயைந்தவா றெஃது எனவும் ஆராய்ந்து பார்ப்போம். வள்ளுவர் வாய்மை இக்கருத்துக்குச் சிறிதாதல் உதவிசெய்யும். செந்நாப்போதார் "ஊழ்" என்றதோ ரதிகாரத்தி னிறுதிக்குறளாகக் கூறியுள்ளதைக் காண்போம்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

[ஊழினை நீக்குதற்காகப் பல சூழ்ச்சிகள் செய்தாலும் வேறுவழியாக முன்வந்து நிற்பதாய ஊழினைப்போல் மிக்க வலியுடையன எவை]

இக்கருத்துமன்றி, ஊழான் வருவன நீக்குதலரிது என்ற கருத்தும் வந்துளது (376). இக்கருத்துக்களனைத்தையும்

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

[வினை செய்தற்கண் தாழாமை யுடையவர் ஊழினையும் புறங்காண்பர்.]

என்ற குறட்கருத்தான் வள்ளுவர் மாற்றிவிடுகின்றார். "இவ்வாறு வள்ளுவர் மாற்றிக் கூறுவானேன்? முன்னர் ஊழே பெருவலி யுடையதெனக் கூறிப் பின்னர் அதனினும் மிக்க வலியுடையதொன்றுளதென்று நம்மை ஏமாற்றுகின்றார்! நம்மறிவை நிலைக்கவொட்டாமல் இங்ஙன மலைக்குமிடங்கள் வள்ளுவர் வாய்மொழியிற் பல உள!" என்று கெழுதகை உழுவலன்பரொருவர் என்னை நோக்கிக் கூறினார். "நம்மை ஏமாற்றுகின்றார்" என்ற சொல் என்னை மிகுதியுங் கலங்கச் செய்தது. "ஊழ், முறை, நியதி விதி என்பன ஒருபொருட் கிளவிகளாகும். தத்தமக்குற்ற விதிதனைத் தாந்தாமே கதிபெறச் செய்து கோடலாம். "விதி விதி" என நினைத்து வருந்தி ஆள்வினையிலா திருப்பவன் தான் முற்போக்கடையாதிருக்குமோ ராற்றினை வகுத்துக்கொள்கின்றவனாகின்றான். கள்வனொருவன் சிறையினகத்து வருந்தி வாழ்தலைக் கண்டு நீ இங்குறைதற்குற்ற காரணமியாது? என வினவின், அன்னவன் "என் விதி" எனக் கூறுவன்; அல்லது "என்தலை விதி" எனவுஞ் சாற்றலாம். இத்தொடருக்குச் சரியான பொருளைத் தேர்வோம். தலை என்ற சொல்லை ஆகுபெயராக வைத்து ஆறும் வேற்றுமை யுருபைச் சேர்த்து எழுதின் "என் தலைவனது விதி" என வருதல் காண்க. இன்னவன் தலைவன் யாராயிருப்பினும் இருக்கட்டும். குற்றஞ் செயின் தண்டனை யடைதல் இயல்பேயன்றோ? நாம் 'ஊழ்'' என்ற சொற்கு, விதி சட்டம் என்ற பொருளினை முன்பே கண்டோம். அவ்விதி அரசனது விதியாகவே கொண்டு நோக்கின் "ஊழிற் பெரு" என்றகுறளின் எதிரொலியாக "வேந்தன் சீறினுந் துணையில்லை" என்ற தாய்மொழி நிற்றல் தெளிவாகும். ஆகவே "ஊழையு முப்பக்கங் காண்பர்" என்றகுறட் கருத்தால் வள்ளுவர் நம்மை ஏமாற்றவில்லை. ஆய்ந்தோய்ந்து நோக்காமையின் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கின்றோம். அரசனுடைய சட்டத்தை முயற்சி முகத்தான் மாற்ற லியலுமென்பது சிறிது உன்னுவார்க்குப் புலனும்" என அவ்வன்பர் கூற்றிற்குப் பதில் பகர்ந்தேன். இனி, துன்பமுற்றவனே இன்பமுறுவான் என்ற கொள்கை எத்துணை உண்மையுடைத்தெனக் காண்போம்.

இன்பமிசைதொறு மற்றத னின்னாமை நோக்கிப்
பசைதல் பரியாதா மேல்.

[இன்பமானது தம்மைப் பொருந்துந்தோறும் (அதனான் வருவதாய) துன்பத்தை உணர்ந்து மேலோர் (அத் துன்பத்தை) விரும்புதல் செய்யார்]

ஈங்குக் குறித்த மேலோர் தாமாகவே இன்பத்தை வெறுக்கின்றார். என்னை? பின்னர் அதனால் வரூஉந் துன்பம் நோக்கி என்பர். அன்னவர்க ளின்பத்தை விரும்பின் எய்தலுமாம். ஆனால் அவர்கள் அதனை விரும்பினார்களில்லை என்பதை வருவித்துக்கொள்ளலாம். ஈண்டுத் "துன்பமுற்றவன்" என்றது யாதானுமொன்றினுக்காகவே என்ற கருத்துடனன்று. நல்குரவான் சிலர் துன்பமுறலாம்; தீச்செயல்கள் செய்ததின் காரணமாய்ச் சிலர் துன்பமுறலாம்; செல்வத்தானே சிலர் இடும்பையுறலாம். இன்னன பலவாறுள்ள வன்றே! நல்குரவான் துன்ப முற்றவன் எவ்வின்பத்தை யடைகின்றான்? எவ்வாறடைகின்றான்?என்பதை ஓர்மின். பின்னர்த்தீச்செயலால் துன்பமுற்றவன் அத்துன்பத்தின் கொடுமை தாங்கவியலாது."ஐயகோ! நான் இச்செயலைப் புரியாதிருப்பனேல் இத்துன்பத்திற் காளாவனோ? யான் இச் செயலை இனிக் கனவிலும்கருதேன்"எனக் கூறுதலைக் காட்டுமன்றே? துன்பத்தின் கொடுமை யுணர்ந்த அன்னவன் அச்செயலுக்குக் காரணமாயவொரு செயலைக் கருதாமையின் யாதொரு வருத்தமு மிலனாகின்றான். ஒவ்வொருவருந் தத்தம் நிலையினை உன்ன உன்ன இன்பவளர்ச்சி எய்தி முயற்சி பெருகி இன்ப வாழ்வு நடாத்துகின்றார்கள். ஒவ்வோர் துறையிலும் தன் முயற்சியினையும் நல்லொழுக்கத்தையும் கருதியே மக்கள் வளர்ச்சியடைதல் வேண்டும், என்ற புத்தமதக் கொள்கையும் ஈண்டுக் கருதற்பாலதாம். "மக்கள் மீண்டும் மீண்டும் தோன்றியழிதலும் உயிர்கள் மாறி மாறி வளர்ச்சியடைவதும் உலக வியற்கை" என்ற கொள்கையும் கருதற்பாலதாகும்.

குலசேகரர்.

[669 பக்கத் தொடர்ச்சி]

பிறவி வேண்டுந் துறவி.

ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ
வானாளுஞ் செல்வமும் மண்ணரசும் யான்வேண் [டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே. 2.

(ஆனாத - குறையாத ; அரம்பையர் - வானுலகமங்கையர்)

மீன்

குருகோ பறந்துவாழும் பண்பினதாகலின் மலையை நீங்கி வெளியே பறந்தும் போகலாம். இயற்கையிலேயே இவ்விடத்தைவிட்டுப் பிரியலாகாதபடி இருத்தல்வேண்டும். மீன் நீரைவிட்டுப் பிரிய முடியுமோ? முடியாதாகலின் வேங்கடத்தே மீனாக விளங்கவேண்டுகின்றேன். குருகாய்ப் பிறப்பேன். அஃதியலாதேல் அதனால் குத்திக்கொத்தப்படும் மீனாகப்பிறந்து அவ்வகையில் பயன்படுவேன். உண்மை யறி வின்பமான நிலையில், உண்பானும் அவனே உண்ணப்படு பொருளும் அவனே ஆகலின், மீனென்றும் குருகென்றும் வேற்றுமை யில்லையன்றோ? மீனாய்ப்பிறந்தாலும் பிறப்பேன் ; வானவனாக ஒருநாளும் ஒருப்படேன்.

வான்

உயிர்நிலையைமறந்து ஆரவாரச் சுழியி லாழ்ந்து அங்கெழுந்த நீர்க்குமிழிபோலப் பெயரளவில் அழியாதவராய்ப்பெருஞ்சிறப்பொடு வாழ்வதும்வாழ்வேயோ! அழியாத நிலையுடைய நாம், அழியும்உடலை அழியாத இன்ப ஊற்றென எண்ணி இன்பமடைவது என்ன பேதைமை. வானவராகப் பிறந்ததால்தான் என்னை? தன்னுள்ளே சுரக்கும் தலையாய இன்பத்தைநுகராது பெண்களையும் பிற பொருள்களையும் நச்சித்திரிந்து நாய்போலலைவதோ வாழ்க்கை. வானவர் பெறும் பெருவாழ்வுதான் என்னை? வானரமகளிரோடுகூடி இமையா நாட்டத்தவராய் அவர்களது அசைவிலா அழகினைக் கண்டு ஐம்புல இன்பம் நுகர்வதுதானே. மேலான நிலத்தே, சிற்றின்பச் சுனையாம் பெண்களிடத்தே மீனெனத் தேக்கித்திரியும் வானவர்உலகில் பெருஞ் செல்வமாவதுஎன்னை?ஐம்புலநுகரும் அருஞ்செயலேயன்றோ?

ஆனாத செல்வம்

அவ்வின்பத்தின் நுட்பத்தையேனும் அவர் அறிவரோ? காதலனும் காதலியுமாகக் கலந்து ஒருவராய் நின்றாலன்றி இன்பக்களிப்பென்பது ஏது? அவ் வன்புநிலையில், மக்கள்அழகு உயிர்ஒளியாம் அறிவுவிளக்கின் அருஞ்சுடராக அமைகின்றது. மற்றைய இடத்திலோ அவ்வழகு, மேனிமினுக்காய்ப் பரத்தையர் பண்பாகிப் பாழாகின்றது. பொன்னும் மணியுமான செல்வம் அனைத்தும் வெளிப்பகட்டாய் உடலின்புறத்தே நின்றுவிடுவதுபோலப் பரத்தையர் அழகும் உயிரளவிற் சென்று ஒளிராது உடலளவில் நின்றுவிடுகின்றது. எனவே அவ்வரம்பையர் மேனி, மினுக்கும் செல்வத்தை வளர்க்கும் செல்வமேயன்றி அறிவினையும் அன்பினையும் வளர்க்கும் அழகன்று. மற்றைய பரத்தையர் மேனிமினுக்கு நாளடைவில் நிறம் மாறுகின்றது; அரம்பையர்மேனிமினுக்கோ குறைதலும் மிகுதலும் அடைவதில்லை. தோன்றும்போதே அழகொடு தோன்றுவர்; அழியும்போது அழகொடு அழிவர். இடைநின்ற நிலையில் மாறுவதில்லை; ஆனால் முற்றும் ஒருங்கே ஒருநாளழிவதுண்டு. அம்மேனிமினுக்கும் செல்வமேயாகலின் சென்றழியும் தன்மையதேயாம். ஆனால், அழியாத செல்வம் ஈது அன்றாயினும், ஆனாத செல்வமேயாம்.

அரம்பையர் தற்சூழ

ஒருவனுக்கு ஒருத்தியும் ஒருத்திக்கொருவனுமாய் ஒத்துவாழ்வதே உயர்ந்தோர் ஒழுக்கமாகும். அவ்வுயரிய அன்புநிலையை அடைந்து உண்மையறிவின்பத்தை உணர்ந்து துய்க்காது, பெண்களை விளையாட்டுப் பொருள்களாக்கிக் காதற் கழிவிடமாம் கைச்சரக்காகக்கொண்டு பொழுதுபோக்கல் புலையர் தொழிலேயாகும். தான் ஒருவனாகத் தன்னலம் பாரித்துத் தனிநின்று, தண்ணருள் ததும்பும் தாய்மாரை அடிமைகளாக்கியதோடு நில்லாது, அந்நிலையில் செருக்கித் திளைத்துத் தன்னை அவர்கள் சூழ்ந்துநிற்கச் செய்து வீற்றிருப்பது தூய வாழ்க்கையன்று.

வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்

இது வானரசின் நிலையானால், மண்ணரசும் அவ்வகையில் அத்தகையதாம். இவை செல்லுந்தன்மையினவாய செல்வமேயாம். ஒன்றும் கைக்கெட்டாத கருவானத்தைக் கட்டியாளுதலே வானாட்சி. கனவுலகே கண்ணிமையாதார் உலகம். மண்ணரசோ மண்ணை அழியும் தனிப்பெருஞ் செல்வமென்றன்றோ பொருள் தருகின்றது. யானும் ஓர் அரசனாதலின் இவ்வரச செல்வத்தின் உண்மையறிவேன். ஆதலின் அவற்றின் மயக்கவலையிற் சிக்கி வருந்துவேன் அல்லேன். இரண்டும் ஒருங்கேபெறினும் யான் வேண்டேன். பொய்யொடு பொய் பொருந்தினால் மெய்யாமோ. செல்வத்தோடு செல்வஞ் சேர்ந்தால் செல்வமாகாது, செல்லாமல் நிலைக்கும் சிறப்பாகுமோ? ஆதலின், அவைகளை வேண்டித் தவங்கிடப்பவன் யானல்லேன்.

திருவேங்கடம்

ஆறுதை செல்வமாம் அம்மேனிமினுக்கில் ஆரழகாயது, அன்புவலையாம் கண்ணே யன்றோ? கண்ணின் கட்டழகையும் கடந்துநின்று களித்துத் திரிவது நீரிலே மின்னிப்பொலியு மீனேயாகும். ஆண்டவனருகே அம்மீனாய்ப் பிறப்பினும் அவனடி அடைதல்கூடும். காதற்கடலில் கலங்கும் மீனாகி, இயற்கைக் கெதிர்நின்று இவ்வானவர்போல வாழ்வதினும் இயற்கையோடியைந்து நீரொடு நீராய்நின்று மின்னிப்பொலியும் மீனாய் விளங்குவது மேன்மையன்றோ? வானுலகில் கள்ளுண்ட களிப்பே உண்டு. மீன்வாழும் வேங்கடத்தே தித்திக்கும் தேனுண்ணும் தெளிவுநிலையுண்டு. மேனிமினுக்கும் வெளிப்பகட்டும் ஆரவாரமுமே அங்கு உள்ளன. இங்கோ இயற்கையழகு எங்கும் பொலிகின்றது. அங்கோ நாகரிகப் பெருக்கம்; இங்கோ நடுநிலையிலூறும் இன்பப்பெருக்கம்; அங்கே ஆள்வானும் அடிமையுமாய் வாழ்வர். இங்கோ, புல்லும் மக்களும் மாக்களும், கல்லும் நீரும், மீனும் மலையும் மாவும், ஒன்றுபட்டு உயர்நிலையில் உவந்திருக்கும் உரிமையோடு அனைவரும் ஒன்றாய் வாழ்வர். வானைக் கட்டியாள இமைகொட்டாது கனாக்காண வேண்டாம். வானத்தில் மணமாய்ப் பரந்து எங்கும் நிறைந்து நிற்கலாம். மண்ணைப் ஒழிதல் வேண்டாம் மண்ணும் மணக்கும் மலையன்றோ ஈது. இறைவனோடு இயைபுடைய இம்மலையிலிருக்கும் மீனினும் இன்பமுடைய பொருளும் வேறொன்றுள்ளதோ? மீனென இகழவும் படுமோ. இறைவன், உலகும் உயிருமாய் முறையே மலர்ந்து விரிந்தநிலையில் முதலில் மீனென விளங்கினான் அன்றோ? நீர்மையுள்ள இடத்தில் நிலைநின்ற நீர்மையும், தானழியினும் அடைக்கலமான அடிநிலையை அகலாத அருமையும் பெற்றுப் பொலிவது மீனே யன்றோ?

தேனார் பூஞ்சோலை - சுனை

கண்கவர்வனப்பொடு கருநிறம்கொண்ட கண்ணன் மலையேதான் கட்டழகுநிறைந்த கருவூலமாகும். பச்சைப்பசேர் எனப் பார்ப்பவர் கண்ணைப்பறித்து விளங்கித் தண்ணென்று நிழல்தரும் சோலையோ, இலையும் பூவும்கொண் டியற்றியருளிய இயற்கையாண்மையாம். இங்கிருந் தின்பந்துய்ப்பன எவ்வகை யுயிருமேயாம். வெயிற்கொதுங்க நிழல் தருவதொன்றே இதன் பெருமை என எண்ணற்க. கண்ணைக்கவரும் கனிமலர் பல காணலாம். (பூ) அஃதொரு காட்சியேயாம். நறுமணங்கமழும் நாண்மலர் பலவும் நாம் முகர்தற்கோர் இன்பம் உதவுகின்றன. நாண் மலரோ தேன் பெருக்கமாம் தித்திக்கும் சிற்றுண்டிதந்து நாவையும் நம்மையும் மகிழ்விக்கின்றது. (தேன்) பருகவும் பனிநீரும் சுனைநீராக ஒருபால் ஊற்றெடுக்கும், தேன் வண்டுகளின் தென்ன எனும்பாடல் செவிவழியே புகுந்து மனத்தை உருக்குகின்றது. (தேன் - வண்டு) இத்தகைய இடத்தே மெல்லெனக் காற்றுவீச ஊற்றின்பம் பெற்று உண்மையை உணர்வோம் அன்றோ? அருளின் குளிர்த்தியோடமைந்த சுனைநீர் அடுத்தே இருத்தலின் அங்கு உலவும் காற்றும் அன்புருவாய் மெல்லெனவீசி உள்ளமும் உடலமும் குளிர, இன்பமூட்டும் சோலைநடுவே தாங்கிநிற்கும் சுனையின் அழகைச் சொல்லவும்வேண்டுமோ. இயற்கையின் அமைதியின்பம் கண்வளரும் தொட்டிலே அச்சுனை யாகும். உலக ஆரவாரத்திடையே உயர்ந்தோர் நிலையடைந்து மனக்கொந்தளிப்பின்றி நிற்பதற்கு இந்தச் சுனையே சிறந்த உவமையாகும்(சுனை). இவ்வமைதிஇன்பத்தில் மின்னிப்பொலியு மீனாய்ப் பிறப்பதன்றோ பெரும் பேறு. வானுலகிலும் ஐம்புலஇன்பமே பெறுதல் கூடும். ஆனால் அவ்வின்பம் அரம்பையர் இன்பமாய் இழிநிலையடைந்தது. வேங்கடத்தும், கண்டுகேட் டுண்டுயிர்த்துற்றறியும் ஐம்புலஇன்பமு மொருங்கே நுகர்கின்றோம்; ஆனாலிதுவோ இயற்கையோடியைந்த இறைவன் வடிவான உண்மையறிவின்பமாக உயர்ந்து விளங்குகின்றது. ஆகலின், வானவரினும் மீனே சிறந்ததாம்.

விதியுடையே னாவேனே

மீனாய்ப்பிறக்கும் பெரும்பேற்றினை அடியேனான் இதுபொழுது பெறாமற்போனாலும், அவ்வாறு பிறப்பதற்கேற்ற ஆகூழ்பெறினும் அமையும் அன்றோ? நிழலும் குளிர்த்தியும், மணமும் அழகும், பாட்டும் பண்பும், மென்மையும் ஒளியும், இனிமையும் இன்பமும் பெற்று வாழ்வதன்றோ வாழ்க்கை. அவ்வாழ்க்கை வாழ்வது வேங்கடத்து மீனன்றோ?

வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்.

இராசசூயச் சருக்கம்.

மயனும் தான் சொன்ன மொழிக்கேற்பச் சிற்பிகள் பன்னெடுஆண்டினிற் செய்துமுடிப்பதற்கியலாத செயற்கரிய மணி மண்டப மொன்றை வீரேழ் திங்களிற் செய்துமுடித்தான். அதனகலத்தையு முயர்ச்சியையும் கண்டாரனைவரும் வியந்துபாராட்ட, முரசுயர்த்த கொடியோனு மழற்பிறந்த கொடியுடனதனிற் குடிபுகுந்தான். சின்னாட் சென்றபின் தும்புரு நாரதரென்று தேவ விருடியரிற் சிறந்த விருவருள்ளும் முதன்மை பெற்றவனும், ஆத்மஅறிவை யுபதேசிப்பவனும், மனிதர்க்குள்ள வொற்றுமையைப் போக்குபவனுமான நாரதமுனி யங்கெழுந் தருளினான். அவனைக் கண்டதும் அனைவருமெழுந் தெதிர்கொண்டழைத்து வந்தனர். அப்பொழுது, பாண்டுமைந்தனும் அவ்விருடியை,

671 பக்கத் தொடர்ச்சி

ஏற்றினா னாசனத்திற் றனித்தனியே
யுபசாரம் யாவுந் தந்து
மாற்றினான் வழியிளைப்பு மலரயன்போ
லிருந்தோனை மகிழ்ச்சி கூர்ந்து
போற்றினா னீவரயான் புரிதவம்யா
தெனப்புகழ்ந்தான் பொதியிற் றென்றற்
காற்றினா லரும்புநறுஞ் சூதம்போற்
புளகரும்புங் காயத் தானே.

[தென்றற்காற்றினால்அரும்பும் மணம்பொருந்தியமாமலர் போல், அவன்வருகையால் மயிர்ச்சிலிர்ப் புண்டாகப்பெற்ற உடலுடையதருமன் அவனை ஆசனத்திலமர்த்திச் செய்ய வேண்டிய சோடசோபசாரங்களனைத்தையும் முறையே செய்து, வழியிளைப்பைஆற்றி, பிரம்மாவைப் போன்றிருந்தவனை யுவகையோடு புகழ்ந்து பாராட்டினான் ; நீ வர யான் என்ன தவம் செய்தேனெனப் புகழ்ந்தான்]

மகிழ்ச்சியினாலும், பெரியோன் தன்னை யொரு பொருட்டாக மதித்துத் தன்னில்லம் புகுந்த செய்கையாலுண்டான பரபரப்பாலும், விரைவுட னுபசரித்தானென்பது தோன்ற, ஏற்றினான் மாற்றினான் போற்றினானென்று வினையை முதற்கண்வைத்துக் கூறினார் ஆசிரியர். உபசாரம் பதினாறு வகைப்படும். தவிசளித்தல், கையில் நீர்தரல், காலைக்கழுவ நீர்தரல் முதலாகியவை முதற்கண் செய்யப்படுவை. நீராட்டி ஆடையளித்து, முப்புரிநூலுதவி, நறும்புகை காட்டி விளக்கிட்டுக் கருப்பூரம் ஏற்றல் விருந்தினனைக் கடவுளாவாகவெண்ணிப் பின்னால் செய்யப்படுபவை. பின்னர் அமுதமூட்டி யடைக்காயீந்து மலரானருச்சித்தல்முதலியன விறுதியிற் காட்டப்படு முபசாரமாம். இவை யாவற்றையும் விடாமற் றொடர்ச்சியாயொன்றன்பினொன்றாய்ச்செய்தனனென்பதுதோன்ற 'தனத்தனியே யுபசாரந்தந்து' என்று கூறப்பட்டது. திருமாலிடத்துத் தோன்றிய (அஜன்) பிரமனது மனதிலுண்டானவனாகிய நாரதனைப் பிரம்மனாகவே கவி கூறினார். போற்றினதும் புகழ்ந்தது மிவ்வாறென்பது அடுத்தசெய்யுளிற் சொல்லப்பட்டது. தென்றற் காற்றுத் தெற்கிற் பாண்டியநாட்டிலுள்ள பொதியமலையிலிருந்து வருவதாய்க் கூறப்படுவது கவிமரபாதலாற் பொதியிற்றென்றல் என்னு மடைமொழி தரப்பட்டது. நாரதனைத்தென்றலுக்கும் தருமனை மாமரத்திற்கும், அவன்மயிர்க்குச்செறிந்ததை மாமரந் தளிர்த்தலுக்கும் உவமை கூறினார். நாரதன், காலன் திசையாகிய தென்றிசையில் பித்ருதேவதைகள் வசிக்குமிடத்திற் பாண்டுவைக்கண்டு அங்கிருந்தும் வந்ததனால் தென்றலுக்கு ஒப்பிடப்பட்டான். காற்றைப் போல், தன்கருமம் நிகழ்வுழி விரைந்துசெல்பவனும் தற்செயல்களாய் உலகத்திற்குப் பொதுவில் நன்மையே விளைவிப்பவனு மவனாதலால் உவமை பொருத்தமுடையதென்றே சொல்லலாம்.

நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
யல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர

என்னும் நன்னெறிச் செய்யுளுக்கிணங்கக் கடையடியிணைந்திருப்பதைக் காண்க. தென்றல் வரத் தேமா தளிர்ப்பதுபோல் நல்லோனாகிய நாரதன் வரவுகண்டு இயற்கையாய் மெய்ம்மறந்து உடல மின்புற்றுப் புளகரும்பியது,தருமபுத்திரரின் அரும்பெருங்குணத்தை வெளியிட்டவாறு.

யான்புரிந்த தவமுலகில் யார்புரிந்தார்
அவனிபரி லிசையின் வீணைத்
தேன்புரிந்த தெள்ளமுதா லமுதுண்டோர்
செவியிரதந் தெவிட்டு விப்பாய்
மான்புரிந்த திருக்கரத்து மதியிருந்த
நதிவேணி மங்கை பாகன்
தான்புரிந்த திருக்கூத்துக் கிசையமகிழ்ந்
திசைபாடுந் தத்துவ ஞானி

[வீணையிசையின் தேனாகியதெள்ளியவமுதத்தால், முன்னரே அமுதமுண்டோர் செவிநிறையத் தெவிட்டுவிப்பவனே; மான்தங்கிய அழகிய கையும், மதியிருந்ததும் கங்கை தங்கியதுமான சடைமுடியையும், மாறாத இளமையையுமுடைய உமைபாகன் தான்புரியும் திருக்கூத்துக்கு ஏற்ப மகிழ்ந்து இசைபாடும்தத்துவஞான முணர்ந்தவனே! உலகிலுள்ள அரசரில் (நீவரும் பாக்கியம்பெற்ற) என்னைப்போல் தவம் புரிந்தவர் யாரிருக்கின்றார்].

இதற்கு முன்கவியில் 'நீவர யான்புரி தவம் யாதெனத்' தொகுத்துக் காட்டியதை யிச்செய்யுளில் வகுத்துக் காட்டாக விளக்கிக் கூறுகிறார் ஆசிரியர். முன்னரே வாயா லமுதுண்டுத் தெவிட்டித் தேக்கெறிந்திருப்பவருக்குச் செவிவா யமுதினை யூட்டுவிப்பாய், என்று நயம்படக் கூறியிருப்பது கொள்ளத்தக்கது. அவ்வமுதமும் வீணையி னிசையானை தேனொடு கலந்த தெள்ளமுதம். சங்கீத சாகரத்தினின்றும் கடைந்தெடுத்து இசையின் போக்கனைத்தும் ஒருங்கே திரட்டித் தரப்பட்ட செவிக்கமுது அது.

மூன்றாமடியிற் சிவனைக் குறிக்கவந்த விடத்து மான்புரிந்த திருக்கரத்து மதியிருந்த நதிவேணி மங்கைபாகன், என்று அவரைச் சிறப்பித்துக் கூறியது நாம் முன் சொன்னதுபோல் ஆசிரியரது சமநிலையையுணர்த்துகிறது. மானேந்தியது, தன்னைக் கொல்ல வெண்ணித் தாருகவனத்து முனிவர்கள் செய்த யாகத்தினின்று வெளிப்போந்த மான் முயலகன் முதலிய பலவற்றைத் தன்னிடத்தேகொண்டு அவற்றை யவலமாய்ப் போம்வண்ணம் செய்த திருக்கூத்தால் நடந்தது. உலகத்தில் மனிதரைப் பீடிக்கும் குற்றங்கள் தன்னைப் பீடிக்காமல் இவற்றையடக்கியாண்டு உலகத்தார்க்குச் செய்யவேண்டிய நெறிமுறையைக் காட்டுபவன் கடவுள். அதோடு தன்னைச் சரணமடைந்த சந்திரனைக் காத்து அவனுக் குதவியதுபோற் றன்னைச் சரணடைந்தாரைக் காத்து அவரை யுய்யச்செய்பவன். தேவராயினும் யாவராயினுந் தன் பெருமையறியாது அவரை மதியாமல்நிற்பவரையடக்கியாளும் திறமைவாய்ந்தவரென்பது தோன்ற நதிவேணி யென்று கூறப்பட்டது. மங்கைபாகனென்பதுசக்தியுடன் பொருந்திக் கருணைகடவாதவன் என்பதைத் தோற்றுவித்து நின்றது.

உலகம் உய்யும்பொருட்டும், உலகிலுள்ள இயங்குதிணை இயங்காத்திணைப் பொருள்களெல்லாம் தத்தம் கருமத்தை முடிக்கும்பொருட்டும், இறைவன் அவ்வவற்றின் உள்நின்றூட்டுவிக்கும் ஆட்டத்தையே திருக்கூத்தென்பது உலகறிவிடயம். அக்கூத்தின் பொருளையுணர்ந்து அதற்கேற்பத் தன் தத்துவ ஞானமாகிய பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் யூகையாலன்றித் தன் மெய்யுணர்வாலறிந்து, மனனஞ்செய்து அந்தத் திருக்கூத்திற்கேற்ப "இசைபாடும் மேலோனாகிய நீ வரப்பெற்றது எத்தவத்தால்" என்று போற்றினான் தருமன்.

இவ்வாறு போற்றப்பெற்றநாரதர் தான் பித்ருலோகம் சென்றதும் அங்கே பாண்டுவைக் கண்டதும், அவன் தன் கான்முளையாகிய தருமனை யிராசசூயயாகஞ் செய்யச்சொன்னதுஞ் சொல்லி

'மண்மிசைநால் விரனிற்கும்
மணிமகுடத் தணியரங்கில்'

அதை முற்றுவிக்கக் கழறினான். அம்மண்டபம், மண்ணின்மேல் அதற்கிணை பெதுவென வெண்ணிக்

கடைவிரலை மடக்கியபின், அதற்கப்பால் இணையின்மையால் எண்ணுதற்கின்றி மற்றைய நான்கு விரல்களும் மடக்கப்படாமல் நிற்கும் பெருமைவாய்ந்தது.

தந்தை மொழியைத் தனயருக்குச் சாற்றி, முனிவனகன்றதன்பின், கிருஷ்ணனுந் தான் நெடுநாளாய் மனதிற்கொண்டிருந்த சராசந்தவதம் முற்றியதென்றெண்ணி யவர்களுக்குச் “சராசந்தன் இவ்வாறே நரமேத யாகமுடிக்க அநேக அரசர்களை யடைத்துவைத்திருக்கிறானதலால் அவனை வென்றால், அவ்வரசர்களெல்லோரும் நமக்காட்பட்டவராய், நமது யாகத்தை யெளிதில் நிறைவேற்றிவைப்பர்” என்று தெரிவித்தான்.

அச் சராசந்தனைக் கொல்ல,

‘சதகோடி யிபமதுகைச் சதாகதிசேய்
தனையொழியச் சாதிப்பார் யார்’?

நூறுகோடி யானையின் வலிமையுடைய வாயுவின் குமாரனை பீமனைத்தவிர வேறே யாரிருக்கின்றார்கள்? இயற்கையிலேயே மிக்க வலிமையையுடைய பீமன், முன் துரியோதனனால் விடமுண்பிக்கப்பட்டு நதியிலெறியப்பட்டபோது பிலத்துவாரத்தின் வழியாய் நாகலோகஞ்சென்று அங்கேயுமிருந்த கலசங்களிலிருந்த அமுதத்தை யுண்டதனால் நூறுகோடி யானையின் வலிமையைப் பெற்றான். சதாகதியென்பது, என்றும் சஞ்சரிக்கும் காற்றாகிய வாயுவைக் குறித்து நின்றது.

ஆரமணங் கமழசல மநேகமுள
வாணனு மலையின் கூல
வாரிதியை மதிப்பதற்கு வல்லதுமந்
தரமன்றி மற்று முண்டோ
போர்விசய மவனுடன்முன் பொருதோரில்
யார்பெற்றார் போது மிப்போ
தாரணமா முனிவரரா யெனப்புகன்றா
னறன்மகனு மஃதே யென்றான்.

[சந்தன மரங்களின் மணங்கமழும் மலைகள் அநேகம் உண்டாயிருந்தபோதிலும், அலைகள் மோதும் கரையையுடைய கடலைக் கடைவதற்கு மந்தரகிரியொழிய வேறு மலையுண்டோ? அவனுடன் முன் சண்டையிட்டவர்களில் செயங் கொண்டா ரெவருளர்? ஆகையால் இப்போது யாங்கள் வேதம்வல்ல முனிவர்களாய் வேடம் மாறிப் (போதும்) போவோம், என்று கண்ணன் கூறத் தருமபுத்திரனு மதற் குடன்பட்டான்]

முதலிரண் டடிகளிற் கூறிய முறையில், சராசந்தனைவெல்ல வீமனன்றிவேறிலரென்ற உவமேயத்தை யெடுத்துக் காட்டியதனால் எடுத்துக்காட் டுவமையணியாம். ஆரணமா முனிவரராய் வேடம்பூண்டு போதல் அக்காலத்தில் எளிதாயிருந்ததால், நாம் முற்கூறியபடி வருணபேத மக்காலத்தில் நெருக்கடியாயிருந்ததில்லை யென்பதும், அது பிற்காலத்திற் றோன்றியசெய்தியேயென்பதும் போதரும். இச்செய்யுளில் ஹாரம், அசலம், அநேகம், கூலம் வாரிதி, விஜயம் ஆரணம் மஹா, முனிவரர் முதலிய வடசொற்கள் விரவியிருப்பது நோக்கத்தக்கது. ஒவ்வொரு செய்யுளிலும் இவ்வாறே வடசொற்கள் பொதிந்து கிடப்பதை நண்பர் கண்டுகொள்வரென நம்புகிறோம்.

திருவாய் மொழியின் திறம்.

பகவத்கீதையின் முடிவான நோக்கத்தையே, திருவாய்மொழி தன்தனிப்பெருந் திறமையினால் நேர்முகமாக நிறைவேற்றி வைக்கின்றது. பல்வேறு தத்துவக் கொள்கைகளை ஒன்றுசேர்த்து எவ்வெவரும் ஏற்கவல்ல முடிவுகளை எய்துமுயற்சி கீதையினதாக, திருவாய்மொழியோ,மெய்ந்நெறியை நிகழ்த்திக் காட்டுவதும் போதித் துரைப்பதுமாய முறையினை மேற்கொள்வதனால், ஆய்ந்தறிகின்ற கருவியாம் புத்தியைக்காட்டிலும் உணர்ச்சிக்கு உரிய மனத்தையே சார்ந்த தன்மையது. உலகப் பற்றினின்று ஒருவனை விலக்கிப் பக்திநெறியில் செலுத்துதல் நோக்கமாயின், அதுவே தக்கதென்பதற் கேற்ற காரணங்களை மாத்திரம் கூறினால் போதுமோ—அவ்வுரை ஆர்வமுடைய மொழிகளால் அமைந்திருப்பதும் வேண்டும். இவ் வவசியத்தை அறிந்து, ஆர்வச்சொற்களால் பக்திமார்க்கத்தில் செல்விக்கும் புணர்ப்பினாலும் திறத்தினாலும் பெரியது திருவாய்மொழி. புத்தியால் நுணுகிநோக்கும் குணமுடையோர்க்குப் பகவத்கீதை ஆதரவு அளிக்கலாமெனினும், மாந்தரிற் பெரும்பாலார் அறிவினும், உணர்வினிற்கே எளிதில் ஈடுபடும் தன்மையராதலால், உண்மையான உணர்வின் நற்பயிற்சியாற்றான் அவர் தம் உயிர் உயர்வடையக் கூடியவர்களாயிருக்கின்றார். பெருந்தகை நம்மாழ்வார் கண்டகொள்கையும் குறிக்கொண்ட நெறியும் இன்னவாக, அவர்தம் திப்பியமொழிகள், புலமையின் அருமையால், அருச்சுனனுக்குக் கண்ணபிரான் அறிவுறுத்தியதைக்காட்டிலுமிக்க விரைவினில் நம்மனோர் அனைவரையும் தன்வய மாக்கிவிடுகின்றன.

இதனின்று,கடவுட் தத்துவத்தை வகுத்துரைக்குந் தன்மையில் பகுத்தறிவிற்குரிய ஆற்றலை நம்மாழ்வார் பாராட்டவில்லை என்பது என் கருத்தன்று. தத்துவ ஆராய்ச்சியில் விருப்பமுடையோர்க்கு வேண்டிய அளவு கல்வி நுட்பம் அவரது முதற் பாசுரத்திற் காணலாம்; பின்னும், இடையிடையே கடவுள் என்ற தத்துவம் அவருடைய புத்திக்கு எவ்வாறு எட்டி நிகழ்கின்றதென்பதைத் தெரிவிக்கும் பாசுரங்கள் நெறிமுறையிற் பல வருகின்றன. எனினும், இவ்விஷயம்பற்றிய ஆராய்ச்சியோ அகற்றவேண்டியதொன்று என்னும் பான்மையில் பகர்கின்றனரேயன்றி, அதனை மேற்பூண்டு கொண்டாடவேண்டும் என்று அவர் கையாண்டார் அலர். இவ்வாராய்ச்சிக்கு முடிவு இல்லையாதலால் அது கொண்டுபோய்ச் சேர்க்கும் ஓர் இடமுமில்லை என்பது அவருக்கு நிச்சயம்; ஆகையாற்றான் அதனின்று விலகியே விவகரிக்கின்றனர். நம்முடையவாழ்க்கை, பண்பும்பயனு முடையதாய்ச் சீர்பெற் றுயரவேண்டுமென்பது அவர் கருத்து. இக்கருத்து முற்றுப்பெறக் கூடியதோர் வகையில் தன் கருமத்தைக் கைக்கொள்ளத் துணிந்த மேன்மையர் நம்மாழ்வார்.

செல்வம் செல்வாக்கு ஆதியாய வைபவங்களோடு இவ்வுலகமே நிலையற்று நெகிழ்ந்துவிடுந் தன்மையும், திரும்பிப் பார்ப்பதன்முன் பறந்துபோமிவ் வுயிரின்

விரைவும், புலன்கள் புதுவிக்கு மிழிவும், தொட்டில் முதல் கட்டையீறாக நடக்கும் நாளெல்லாம் நலிவிக்கும் துன்பமுந்துயரும், இல்வாழ்க்கையில் புக்குழக்கும் அல்லலும் அகக்கசிவும், மண்ணிலேயே கண்ணுடைய நண்பர்களை நம்பிநம்பி மதிமோசம் போனோமே என்ற இரக்கமும், கடவுளின் திருவுளத்திற்குப் பக்தியொடு ஆளாகித் தன்னைத் துறப்பதல்லால் இப்பிறவித்தொல்லைக்குத் தஞ்சம் பிறிதில்லையே இல்லையில்லை என்ற துணிவும், இவையனையபாவும்,திருவாய்மொழியானது கவிவரர் காதலிக்கும் நடையழகும் சொல்நயமும் நிறைந்ததாய் ஆர்வம்மிகுந்த எளிய பாசுரங்களால் நம்மனத்தின் ஊன்றி நிலைநிற்கும்படி செய்யாலாகின்றது.

பெரிய கவிகளுக்கு இலக்கணமாகிய எளியநடை திருவாய்மொழியின்கண் திகழக் காண்கிறோம். இம்மொழியினை அப்பெரியோர் திருவாய்மலர்ந்தருளிப் பலநூற்றாண்டுகள் கழிந்தனவெனினும், தமிழர்மனைகளில் இன்றைக்கும் வழங்காத சொற்களேனும் சொற்றொடர்களேனும் அதன்பால் காண லருமை. தன்னளவு புலமை வாய்த்திராத மக்களுக்குத் தன்னுடைய மேன்மையைக் காட்டிக்கொள்ளவேண்டுமென்று நம்மாழ்வார் சூழவில்லையாகையால் கல்வித்திறமையும் சொல்லாற்றலும்காட்டி யாரையும் அவர்பகட்டப்பார்த்திலர்.பாமரர்களுள் பாமரர்களாய மக்கள்தம் அனுபவத்திற்கும் எட்டியுள வாழ்க்கையின் மூலதாரமான வாய்மைகளுக் குரியவைகளேயே அவர் விரும்பி உரைக்கின்றார்.நுண்ணிதின் நுண்ணியதாய தத்துவங்கள் தேர்கின்றவர்தம் உள்ளமேபோல்,காட்டுமிராண்டியின் உள்ளமும் திருவாய்மொழிக்கு இணங்கியே இளகு மென்றாலு மது மிகையன்று. நம்மாழ்வாரது உண்மையான பெருமையின் இரகசியம் இதுவே.

எதிர்வழக் கிட்டுநிற்கும் பலவேறு சமயங்களையும் சமயப்பிரிவுகளையும் பொறுத்திருக்கும் தனிப்பெருந்தகவுடையார் இவ்வாழ்வார். மெல்லென மெல்லென இதமுரைத்துத் தன்வய மாக்குகின்ற புலமையர் இவர். பிற மதங்களைப் பழிப்பதால் தன்மதம் வலிவுற நிறுவப் பெறுகின்றதென்னும் மதிமயக்கத்திற்கு இவர் ஆளாகும் அயர்வுடையார் அலர். எவ்வகைத்தாய தெய்வசிந்தனையு மில்லாமையின்மாட்டே இவர் சினங்கொள்கின்றனர். அச்சினத்தையும் அவர் பெரிதும் மேற்கொண்டு தெரிவிப்பதும் இல்லை. அயலார் மதத்தை வன்மையோடு எதிர்ப்பதாற்றானே தம்முடையமுத்தி கைகூடுமென்று எதிர்பார்த்திருப்போர்க்கும் இப்பெருந்தகைப் புலமையோர்க்கும் இருக்கின்ற வேறுபாடு எத்துணைத்தென்பதை நோக்க நோக்க நாம் வியப்புறுவதோடு நம்மவரிவரென்ற நினைவினால் பெருமிதமகிழ்ச்சியும் நம்பால்வந்தூர்கின்றது.

எம்பெருமான் கிருஷ்ணபரமாத்மாவினுக்கு நற்றொண்டுபுரிவதை மேற்பூண்டு அவரது நினைவுமறவா மனத்தால் முத்திநெறி நாம் காணுமாறு பகவத்கீதை போதிக்கின்றது. இப்பெரிய வாய்மையை உய்த்துணரலாமாயினும், உணர்ந்த யாவையும் தெரிந்துகொண்டு தெரிந்ததைச் செய்கைகளாகமாற்றி ஒழுகுவது எளியதோர் செய்தியன்று. அன்னதற்கு நிலைக்களத்தை என்னவாறு திருத்தி யமைக்கவேண்டுமென்பதும், உலகநெறிவிட்டு விலகி ஆன்மநெறி சேர்வது எங்ஙனமென்றும், அந்நெறிக்கண் நேரவல்ல இடையூறுகள் யாவையென்றும், இப்பயணத்திற்கு எவ்வெவைகளைச் சேகரித்துக்கொள்ள வேண்டுமென்றும், ஆகிய இவையனைய விஷயங்களை ஐயந்திரிபறத் தெளிந்துணரவேண்டியது பகவத்கீதையின் போதனையைப் பின்பற்றுவோர்க்கு மிகவும் முக்கியமாம். தெளிவதற்கு எளியவாகா இத்தகைய கேள்விகளுக்குத் தக்க விடை தருவது திருவாய்மொழியே.

நம்முடைய அரும்பெரும் காவியங்களையும் புராணங்களையும் பயின்று அவைகளிற் கருத்துமுற்றத் தோய்ந்திருக்கின்ற நம்மாழ்வார், மனோபாவம் பெருகுபவராகித் தம்முடைய கவிதாசக்தியால் நம்மனோர் மனம் இடைவிடாது பரம்பொருளிடம் ஊடாடும் வண்ணம் பண்படச் செய்துவைக்கின்றார்.பகவத்கீதை குறித்தமுத்தி இந்நெறியால் கைவரலாகின்றது. பகவானது திருநாமங்களை ஓயாது உரைத்திருப்பதொன்றே இக்கலியுகத்திற்குரிய கடைத்தேறுமார்க்கம் என்பாரொருசாரார். எனினும் எந்திரம்போல் அவர்பேரைச் சொல்லிக்கொண்டிருப்பதென்பது சலிப்புடையசெய்கையாம்.நம்மாழ்வாரோ நல்லதோர்முறையால் நம்மை அழைத்து, சோர்விலாது பரமனது பேரைப் பேசிப் பேசி அனுபவிப்பதெங்ஙனமென்பதைத் தம் பாசுரங்களில் காட்டுகின்றார்.

பகவத்கீதையின் போதனையைப் பின்பற்றுவதற்குத் திருவாய்மொழியை ஓயாமற்பயில்வது பெரும்பயன் தருகின்றதென்பது என்னுடைய அநுபவம். நல்லதோர் கதியைச் சேருமாறு இந்நெறியை என்நாட்டினர் யாவரும் கைக்கொள்ளவேண்டுமென விழைகின்றேன்.

குறிப்பு:—ஸ்ரீமான் C. சுந்தரம் ஐயர் ஆங்கிலத்தில் எழுதி “இந்து” பத்திரிகையில் இரண்டு மாதங்களுக்கு முன் பிரசுரித்த கட்டுரை யிது. தமிழ்மாத்திரம் அறிந்தவர்களுக்கும் பயன்படுமாறு அவர் வேண்டிக்கொண்டபடி இங்கு அதனை மொழிபெயர்த்துத் தந்துளோம்.

ஆசிரியர்.

189070

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

தமிழ்ப் பாடம் 87.

[அஷ்ட பிரபந்தம்.]

[674-வது பக்கத் தொடர்ச்சி]

திருவரங்கத்துமாலை.

ஆடு மரவிற் றுயிலரங் கேச னருமகற்கா
நீடுந் தறியி லுதித்தில னேனி கிலப்பொருள்க
ளூடும் புறத்தினு முண்மையெவ் வாறிவ் வுலகறியு
மீடு மெடுப்புமில் லாவொரு தெய்வ மிவனெனவே.

பதப்பிரிவு:—ஆடும் அரவில் துயில் அரங்கம் ஈசன் அரு மகற்கு ஆ(க) நீடும் தறியில் உதித்து இலன் ஏல் நிகிலம் பொருள்கள் ஊடும் புறத்தினும் உண்மை எவ் ஆறு இவ் உலகு அறியும் ஈடும் எடுப்பும் இல்லா ஒரு தெய்வம் இவன் என ஏ.

பதவுரை.

ஆடும் - ஆடுகின்ற, **அரவில்** - பாம்பின்மேல், **துயில்** - கண்வளர்கின்ற, **அரங்க ஈசன்** - ஸ்ரீரங்கநாதன், **அரு** - அருமையான, **மகற்கு ஆ** - மகனாகிய பிரகலாதனுக்காக, **நீடும்** - நீண்ட, **தறியில்** - தூணில், **உதித்து இலன் ஏல்** - நரஸிம்மமாகத் தோன்றியிரானாகில், **ஈடும்** - தனக்குச் சமானமும், **எடுப்பும்** - உயர்வும், **இல்லா** - வேறு இல்லாத, **ஒரு** - ஒன்றான, **தெய்வம்** - கடவுள், **இவன் எனவே** - இவனே என்று, **நிகிலம் பொருள்கள்** - எல்லாப் பொருள்களின், **ஊடும்** - உள்ளிடத்திலும், **புறத்தும்** - வெளிப்புறத்திலும், **உண்மை** - (அவனிருக்கின்ற) உண்மையை, **இவ் உலகம்** - இவ்வுலகத்தவர், **எவ் ஆறு** - எந்த விதத்தில், **அறியும்** - அறியக் கூடும்.

கருத்து:—இரணியன் புடைத்த அந்தத் தூணிலிருந்தே தோன்றியதினின்று "எங்கு மயமான பொருள் எங்கள் ஸ்ரீரங்கநாதன்" என்ற அவ்வுண்மை ஸ்தாபிக்கப்பட்டதென்பது இச்செய்யுளின் கருத்து.

குறிப்பு:—நிலைமொழி யீற்றுமெய் வருமொழி முதலில் உள்ள உயிரோடு புணர்கின்ற இலக்கண விதிகளுக்கு உதாரணங்கள் இச்செய்யுளில் நிறைந்திருக்கின்றன:— ஆடும் + அரவு = ஆடுமரவு, நிலைமொழி யீற்றிலிருப்பது மகரமெய்யானாலும், இது பெயரெச்சத் தொடராதலால், அம்மெய் கெடாமல் உயிரை ஏற்றது. அரங்கம் + ஈசன் = அரங்க ஈசன், அரங்கத்தில் உள்ள ஈசன் என ஏழாம்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகையாகையால் மகரம் கெட்டது. இது அரங்கேசன், என ஆனது வடமொழிச் சந்தி, அதைப் பின்னர்க்கற்போம். துயில் + அரங்கன் = துயிலரங்கன். தறியில் + உதித்து = தறியிலுதித்து, இலன் + ஏல் = இலனேல். பொருள்கள் + ஊடும் = பொருள்களூடம். புறத்தின் + உம் = புறத்தினும்— இவையெலாம் பொதுவிதியின்படி இயல்புப்புணர்ச்சியாயின. உம் + உண்மை = உமுண்மை; உம் என்பது இடைச்சொல், ஆகையால்இது இடைச்சொற்றொடர், எனவே ஈற்று ம் கெடவில்லை. எவ் + ஆறு = எவ்வாறு; நிலைமொழி ஈரெழுத்துப் பெயராகி முதலெழுத்துக் குறிலாகவும் இருப்பதால் வ் இரண்டாக விரிந்து வருமொழிமுத லுயிரை ஏற்றது. இவ் + உலகு = இவ்வுலகு என்று ஆனதும் அப்படியே. அறியும் + ஈடு = அறியுமீடு, வினைமுற்றுத் தொடர் ஆகையால் ம் கெடவில்லை. ஈடும் + எடுப்பும் = ஈடுமெடுப்பும்; எடுப்பும் + இல்லா = எடுப்புமில்லா— ம் கெடவில்லை, உம் என்பது இடைச்சொல்லாதலால். தெய்வம் + இவன் = தெய்வமிவன், எழுவாய்த்தொடர், ஆகையால் ம் கெடவில்லை.

அறியின ரங்கர்முன் னாளரி யாகிய வப்பொழுது
கொறியி னவுணர்தம் வெள்ளங்கள் கோடியுங் கொன்றதிலோ
தறியின் வயிறிற் றகுவனெஞ் சுஞ்சர பத்துடலு
நெறியின் வகிர்ந்தபி னன்றோ தணிந்தது நீள்சினமே.

பதப்பிரிவு:—அறியின் அரங்கர் முன் ஆள் அரி ஆகிய அப்பொழுது கொறியின் அவுணர்தம் வெள்ளங்கள் கோடியும் கொன்றதிலோ தறியின் வயிறின் தகுவன் நெஞ்சும் சரபத்து உடலும் நெறியின் வகிர்ந்தபின் அன்றோ தணிந்தது நீள் சினமே.

பதவுரை.

அரங்கர் - திருவரங்கநாதர், **முன்** - முன்னே, **ஆள் அரி ஆகிய** - நரசிம்மம் ஆகிய, **அப்பொழுது** - அந்தக்காலத்தில், **அவுணர்தம்** - அசுரர்களுடைய, **வெள்ளங்கள் கோடியும்** - கோடி வெள்ளங்களையும், **கொறியின்** - ஆடுகளைப்போல், **கொன்றதிலே** - கொன்றதினாலோ, **நீள் சினம்** - அவரது மிகுந்தகோபம், **தணிந்தது-ஆறியது**?—இல்லை, பின் எதனால் என்றால்—

அறியின் - ஆராயுமிடத்து, **தறியின்**-(தான் வெளிவந்த) தூணினது, **வயிறின்** - வயிற்றைப்போலவே, **தகுவன்** - அசுரனை ஹிரண்யனது, **நெஞ்சும்** - மார்பையும், **சரபத்து** - சிவசரபத்தினுடைய, **உடலும்** - உடலையும், **நெறியின்** - முறைப்படி, **வகிர்ந்தபின் அன்றோ** - பிளந்தபின் அன்றோ, **நீள்சினம்** - அவரது நீண்டகோபம், **தணிந்தது** - அடங்கியது.

விரிவுரை.—பிரகலாதனைக் காப்பதற்குத் தூணிலிருந்து மிகுந்த கோபத்துடன் தோன்றிய நரசிம்மமூர்த்தி முதலில், அசுரர்கள் வெள்ளம் அத்தனையும் ஆட்டுமந்தையை அழிப்பதுபோல் அழித்துத் தீர்த்தார். ஆனாலும் அவர்கோபம் தணியவில்லை. பிறகு தான் பிறந்த கல்தூண் எவ்வாறு பிளந்ததோ அவ்வாறே ஹிரண்யனது மார்பைப் பிளந்தார். அதனிலுங்கூட அவர் முதலிற்கொண்ட கோபம் தணியவில்லை. இந்தப்பெருங் கோபத்தால் உலகத்திற்கே அழிவுவரலாம் என்று கலங்கிய தேவர்கள் சிவபிரானிடஞ்சென்று தெரிவிக்க அவர் நரசிம்மத்தினுடைய சினத்தை அடக்கும்பொருட்டுச் சரபவடிவமாய்த் தன் சக்தியை அனுப்பினார். நரசிம்மரோ அச்சரபத்தையும் ஹிரண்யனைக்கிழித்தது போலவே கிழித்தெறிந்துவிட்டார். அதன்பிறகுதான் அவர்கோபம் தணிந்ததாம். சரபம் என்பது பாதிமிருகமும் பாதி பக்ஷியுமாகிய ஒருவகைப்பிராணி. மிகுந்த பலமுடையது. எட்டுக்காலும், சிறகுகளும் இரண்டு தலையும் இதனிற்கு உண்டு. இது சிங்கத்தையும் எளிதில் கொல்லவதாம். ஆகையாற்றான் சிவபிரான் தன் சக்தியை இந்த உருவத்தில் அனுப்பினார்.

குறிப்பு.—கொறியின், வயிறின், என்பவைகளிலுள்ள இன் உருபுகள், ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருளன. தறியின், என்பதிலுள்ள இன், சாரியை; ஆறும்வேற்றுமை உருபு தொக்கு இருக்கின்றது, விரியுமாயின், தறி + இன் + அது = தறியினது என்று ஆகும்.

மறிக்குங் கயற்கண்ணி பங்காளன் வாழ்வெள்ளி மால்வரையைப்
பறிக்குங் கபடன் பணைப்புய மோவவன் பைங்கடகஞ்
செறிக்கும் புயஞ்செற்ற வாயிரந் திண்புய மோவவற்றைத்
தறிக்குந் திறமழு வோவரங் காசயத் தாருடைத்தே.

பதப்பிரிவு:—மறிக்கும் கயல் கண்ணி பங்கு ஆளன் வாழ் வெள்ளி மால் வரையை பறிக்கும் பணை புயமோ அவன் பை கடகம் செறிக்கும் புயம் செற்ற ஆயிரம் திண் புயமோ அவற்றை தறிக்கும் திறம் மழுவோ அரங்கா சயம் தார் உடைத்து ஏ.

பதவுரை.

அரங்கா - திருவரங்கா, **மறிக்கும்** - புரள்கின்ற, **கயல்** - கயல்மீன் போன்ற, **கண்ணி** - கண்களையுடைய பார்வதியை, **பங்குஆளன்** - பக்கத்தில் சேர்த்து இருக்கின்ற பரமசிவன், **வாழ்** - வாழ்கின்ற, **மால்** - பெரிய, **வெள்ளி மலையை** - இமையமலையை, **பறிக்கும்** - பெயர்த்தெடுத்த, **கபடன்** - வஞ்சகனாகிய இராவணனது, **பணை** - பருத்த, **புயமோ** - இருபது தோள்களோ, (அல்லது)

அவன் - அவ்விராவணனுடைய, **பை** - பசும்பொனாலாகிய, **கடகம்** - கடகங்கள், **செறிந்த** - அடர்ந்த, **புயம்** - தோள்களை, **செற்ற** - வலியழித்த கார்த்தவீர்யார்ச்சுனனுடைய, **ஆயிரம்** - ஆயிரம், **திண்** - வலியுடைய, **புயமோ** - கரங்களோ, (அல்லது)

அவற்றை-அவ்வாயிரங்கரங்களை, **தறிக்கும்**-வெட்டிவீழ்த்திய, **திறம்** - பராக்கிரமமுடைய, **மழுவோ** - பரசுராமனாக அவதரித்த நீ கொண்ட கோடாலியோ, (எது) **ஜயம்** - வெற்றி, **தார்** - மாலையை, **உடைத்து** - பெற்றது?

விரிவுரை:—இமையமலையை அசைத்துப் பிடுங்கிய இருபது கரங்களுடைய இராவணனை, ஆயிரம் புயங்களுடைய கார்த்தவீர்யார்ச்சுனன் அடக்கிச் சிறைசெய்தானாதலால் அவனைவிட ஆற்றலுடையவன் இவன். இக்கார்த்தவீர்யார்ச்சுனனை ஜமதக்னியின் புத்திரனாய்ப்பரசுராமன் என்ற பெயரோடு அவதரித்த திருமால் வென்றார். ஆகையால் இவர் அவனைவிட ஆற்றலுடையவர். இவ்விதம், ஒன்றைவிட ஒன்று அதிகம், அதைவிட இன்னொன்று அதிகம் என, நயம்பட உரைப்பதற்கு மேன்மேலுயர்ச்சியணி எனப் பெயர். இதுவே வடமொழியில் ஸாராலங்காரம் எனப் பெயர்பெறும். உயர்வுபற்றியும் ஒன்றைவிட ஒன்று விஞ்சலாம், அல்லது இழிவுபற்றியும் விஞ்சலாம்; எப்படியாயினும் அது மேன்மேலுயர்ச்சி யணியே. "பூமி மகா பெரியது, அதனை ஓரடியால் உள்ளடக்கிய திருமாலின் பாதம் பின்னும் பெரியது, அப்பாதம் பக்தர்களுடைய உள்ளத்தில் அடங்குவதால், இவ்வுள்ளம் அதனிலும் பெரியது"—என்று மேன்மேல் உரைத்துக்கொண்டுபோவது உயர்வுபற்றி வந்த இவ்வணிக்கு உதாரணமாகும். "அரிதரிது மானுடராதலரிது, அதனினுமரிது கூன் குருடு பேடின்றிப் பிறத்தல், கூன்குருடு பேடின்றிப் பிறந்தகாலையும்...," என்று வருகின்ற செய்யுளும் உயர்வுபற்றி மேன்மேலுயர்ச்சியணியாம். இனி, "தேவரில் மக்கள் தாழ்ந்தார், மக்களில் தாழ்ந்தன மிருகங்கள், மிருகங்களில் இழிந்தது கழுதை, கழுதையிலும் கடையாவார் கண்ணோட்ட மில்லார்தாமே", என்பதும், "ஊசியோ எங்கும் நுழையும், ஊசிநுழையாத விடத்தும் நீர் நுழையும், நீர் நுழைய இயலாத விடத்தும் புகை நுழையக்கூடும், அப்புகையும் போகலாகா விடத்திலும் வறுமையுடையோன் புகுந்துசென்று இரக்கக் காணலாம்" என்பதும் இழிவுபற்றி வந்த மேன்மேலுயர்ச்சியணி. இழிவுபற்றியும் உயர்வுபற்றியும் மேன்மேலுயர்ச்சியணி தொடர்ந்து வந்திருக்கின்ற அழகு, புறநானூற்றுச் செய்யுள் ஒன்றில் அமைந்திருக்கின்றது. அவ்வடிகளை இவ்வணிக்காக மாத்திரமல்லாது அதன் அருமையான கருத்திற்காகவும் நினைவில் வைத்துக்கொள்வது நலம்:—

"ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று."

(இழிந்தன்று, உயர்ந்தன்று, என்பன எதிர்மறைபோல் தோன்றினாலும், ஓதலில் சிறந்தன்று ஒழுக்கமுடைமை என்பதுபோல், உடன்பாட்டுப் பொருளனவே. இழிந்தது, உயர்ந்தது என்று அர்த்தம் கொள்ளவேண்டும்)

"கொடு என்று ஒருவனிடம்போய் யாசிப்பது, இழிவான செய்கை; அதனிலும் இழிவானது ஒருவன் கேட்கும்போது கொடுக்கமாட்டேன் என்பது. நாமாகவே சென்று ஒருவனுடைய குறையை அறிந்து அவனுக்கு வேண்டியவற்றை அவன் கேட்காமலே கொடுப்பது உயர்ந்த செய்கையாம்; ஆனால் அப்படி ஒருவன் கொடுத்தாலும் நாம் வாங்கிக் கொள்ளாதிருப்பது அதைவிட உயர்ந்தது" என்பது இவ்வடிகளின் பொருள்.

இந்த அணிக்கும் உயர்வு நவிற்சியணிக்கும் ஒரு சம்பந்தமில்லை ; மயங்கவேண்டா. மேன்மேலுயர்ச்சி, ஆங்கிலத்தில் வழங்கும் Climax, Anti-climax என்ற அணிகளின் தன்மை வாய்ந்தது.

இலக்கணம்.

நிலைமொழியிறுதிமெய்யெழுத்து, வருமொழிமுதல் உயிரெழுத்தோடு புணர்கின்ற பொதுவிதிகளையும், அவைகளில் மகரமெய் ஈற்றிற்குரிய சிறப்புவிதிகளையும் பார்த்தோம். மகரமெய்யீற்றுச் சொற்கள் வருமொழி முதல் உயிரோடு புணர்கின்ற சிறப்புவிதிகளுக்குமேல் இன்னுமொரு சிறப்புவிதி இருக்கின்றது.

இதுவரையில் சொன்னவை வருமொழிமுதல், பன்னிரண்டு உயிர்களில் எதுவாயிருந்தாலும் பொருந்தும். இனிச் சொல்லப்போவது, வருமொழிமுதல் உயிரைச் சார்ந்ததாம். அது பின் வருமாறு:—

மரம், குளம் அறம் என்பனபோல் மகரமெய்யை ஈற்றிலுடைய இரண்டெழுத்துக்கு மேற்பட்ட எழுத்துக்களையுடைய பகாப்பதங்களில், அந்த ஈற்று மகரமெய்க்கு முன்னால் இருக்கும் உயிர்மெய் யெழுத்து அகரத்துடன் சேர்ந்த எழுத்துக்களா யிருக்கும். மரம், என்ற சொல்லில் ம் என்னும் ஈற்றெழுத்துக்கு முன் இருக்கும் உயிர்மெய் எழுத்து, ர என்னும் உயிர்மெய். இது ர் + அ, என்று ஆனது. ஆகையால் மரம் (மர் அம்) என்பதில், ம் என்னும் ஈற்றெழுத்திற்கு முன் இருப்பது அகரம். மற்றக் குளம் அறம்

போன்ற சொற்களிலும் ஈற்றுக்கு அயலாக அ என்னும் உயிர் இருக்கக் காணலாம். இப்படியிருப்பதால்,

i. நிலைமொழியிறுதி மகரமெய்யாயும் வருமொழி முதல் அ என்னும் உயிராயும் அமைந்து, முன் உரைத்த விதிகளின்படி அந்த மகரமெய் கெடுமானால், சிற்சில சமயங்களில், மகர மெய் கெடுவது மல்லாமல், அந் நிலைமொழியில் மகரமெய்க்கு அயலில் நின்ற அ என்னும் உயிர் ஆ என்று நீள்வதும் உண்டு. உதாரணம்:—

மரம் + அடி = மரா அடி

இது ஆறும் வேற்றுமைத் தொகையாகையால், ம் கெட்டது. கெட்டு மரஅடி, என்றும் நிற்கலாம் ஆனாலும், அந்த ம் என்னும் எழுத்திற்கு முன்னால் ரகரத்தோடு சேர்ந்துநின்ற அ, என்னும் உயிரானது, ஆ என நீண்டு மரா அடி என்றுகூட ஆவதுண்டு. இப்படியும் ஒவ்வொரு சமயம் ஆகலாம் என்று கொள்ளவேண்டுமே யொழிய இப்படியேதான் எப்பொழுதும் ஆகவேண்டுமென்று எண்ணப்படாது.

இங்கு நீண்டது வருமொழிமுதல் அகரம் அன்று. அது அப்படியேதான் இருக்கின்றது. நிலைமொழி ரகரத்தில் உள்ள அகரமே நீண்டது.

ii. நிலைமொழியிறுதி மகரமெய்யாயும், வருமொழி முதல் ஆ என்னும் உயிராயும் அமைந்து, முன் உரைத்த விதிகளின்படி, மகரமெய் கெடுமானால், சிற்சில சமயங்களில், அம்மகரமெய் கெட்டபின் அதற்கு அயிலில் உள்ள அகரம்(முன்னுதாரணத்தைப்போல்) நீள்வது மல்லாமல், வருமொழி முதலில் உள்ள ஆகாரம் அகரமாய்க் குறுகிவிடுவதுமுண்டு. உதாரணம்:—

குளம் + ஆம்பல் = குளா அம்பல்.

இது குளத்தில் உள்ள ஆம்பல் என்று விரியுமாகையால் ஏழாம்வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகை ஆகும். ஆகவே, நிலைமொழியீற்று மகரமெய் கெட்டது. கெட்டு அதற்கு அயலில் இருக்கும் ளகரத்திலிருந்த அகரம், ஆ என நீண்டு குளா, என்று ஆயிற்று. ஆனால் அதுமாத்திரம் அல்லாமல், வருமொழி முதலில் உள்ள ஆகாரம், அகரமாகவும் குறுகி குளா அம்பல், என்று அச்சொற்கள் முடிந்தன

இவ்விதிகள் அவ்வளவு முக்கியமல்லவாயினும் நீங்கள் படிக்கும் நூல்களில் எவ்விடத்திலேனும் இவ்வாறு புணர்த்தி எழுதப்பட்டிருக்கக் கண்டால் இன்னதது என்று தெரிந்துகொள்ள இயலாமல் திகைக்காவண்ணம் இங்கிதனைச் சொல்லிவைத்தோம்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

15. பூக்கொய் படலம்.

(676 பக்கத் தொடர்ச்சி)

வேள்கிய வாண்மையை வெஃகி னார்சிலர்.

பள்ளியிலுற்ற பழக்கம் மக்களுக்குப் பின்னெந் நாளு மாறு தென்பர். கோசல தேயத்தின் குமரராயினோர் பல்கலை பயிலுமிடம் யாதென விளம்பலுற்ற கம்பர்,

பந்தினை யிளையவர் பயிலிட மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புரவம்

[சந்தனவனமாகட்டும், சண்பகவன மாகட்டும், நந்தவன மாகட்டும், தேன்சொரிகின்ற முல்லைவனம் ஆகட்டும், மாதர் எங்கெங்குச் சென்று பந்தாடுகின்றார்களோ அவ்விடங்களையே, மயிலை வானகமாக உடைய முருகவேள் போன்ற இளைஞர்கள் தாம் கலைதெரிகின்ற கழகமாகக் கொண்டு அம்மாதரைத் தொடர்ந்துசெல்வர்]

என முன் அசதியாடினர். அதற்கிணங்க இங்கு,

செய்யிற் கொய்யுஞ் செங்கு முதஞ்செஞ் சிலையொன்
கையிற் பெய்யுங் காமனு நாணுங் கவினர்த [றாங்
மையற் பேதை மாதர் மிழற்றும் மழலைச்சொல்
தெய்வப் பாடல் சொற்கலை யென்னத் தெரிவாரும்

[வயலிலிருந்து கொய்துகொள்ளப்படும் செங்குமுதமாகிய அம்பும், கரும்பாகிய வில்லொன்றும் கையில் ஏந்திய மன்மதனும் இவரைக்கண்டு நாணும்படியான அழகுவாய்ந்த ஆடவர், தம்மிடத்தில் காதலுடைய பேதைமாதர்கள் பேசுகின்ற மழலைச்சொற்களை, தெய்வப்பாடல்களென்றும், புகழ்ந்து சொல்லப்படுகின்ற வேதசாஸ்திரங்களென்றும் இன்புறக் கேட்டு அறிவுற ஆராய்வாரும்]

ஆவது முற்றிலும் இயற்கையே. காதலால் ஒருவர்க்கொருவர் உரைப்பது நிரம்பா மென் மழலைச்சொலாயினும், கீதமும் வேதமும் அதனின் வேறில என்பதுணர்ந்தவர் அக் கோசலம்வளர் குமரரனைவரும். அன்பு மழகு முளதாயி னஃதன்றிப் பின்பெங் குளதொரு பேறு. இதுபற்றியே அனங்கனாரிவர் அனங்கனன்னா ரவர்கட்குத் தாம் மையலால் மிழற்றும் மழலைச் சொற்களாலேயே ஆரணமும் அருங்கலையும் ஓதுபவ ராகின்றனர். இதனைத் தாம் செய்வது தாமே யறியாராகையால் அவர் 'பேதைமாதர்' எனப்பட்டாரிங்கு. இத்தகைய கலைக்கழகம் சேர்ந்து பயில்வார்க் குள வருத்தம் ஒன்றே. இவ்வாசிரியர் ஓரிடமமர்ந்து ஓதுவாரலர். இம்மடவார் செல்லுமிடந்தோறும் மாணவராமாடவர் உடன்தொடர்ந்துகற்பன கற்றல்வேண்டும். இருபத்திரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் கிரேக்கர் தேயத்தில் இருந்த ஆசிரியர் பெரும் புகழ் அரிஸ்டாடல் என்பார் பட்டிமண்டபத்தின்கண் ஓரிடத் தமர்ந்திராது அங்குமிங்குமா உலவித் திரிந்து கொண்டே தொடர்ந்துவரும் சீடர்களுக்குத் தத்துவங்களைப் போதிக்கும் வழக்கத்தினர் என்று கேள்வியுற்றிருக்கின்றோம். இவ்வயோத்தி அரிவையர் புரியும் உவாத்திமைத் தொழிலுமப் பெற்றிய தாயது.

குலமா மனைவியர் குலவு காதலால் அளவோ அரியவாம் நலங்கள் நேருமோர் மேன்மையைக் கம்பர் இவ்வண்ணங் காட்டுகின்றார். தெய்வப்பாடலும் சொற்கலையுமாய் நின்று உதவுகின்ற மாதரார்க்கு அவர் கொழுநர் ஆற்றவல்ல கைம்மாறு யாண்டு மிலது. யாப்பின தினிமையாலும் சொன்னயச் செறிவினாலும் பொருணயப் பொலிவினாலும் கம்பருக்குப் பெரும்பாலும் இணையென விளங்குகின்ற தோலாமொழித்தேவர், நாயகியின் நலம்பாராட்டுந் தலைவனது கூற்றாக,

காவியா கின்ற கருமா மழைக்கண்ணி
மேவியா னுண்ணு மமிர்தாய் விருந்தாகி
ஆவியா கின்றா ளருமருந்து மாகின்றாள்
பாவியேன் பாவைக்கோ ராளையா கின்றேனே

[காவிபோன்று கரியதாகிப் பெருத்துக் குளிர்ந்திருக்கின்ற கண்களையுடைய என் மனைவி, விரும்பி நான் துய்க்கின்ற அமிர்தம் ஆகி, விருந்தும் ஆகி; என் ஆவியும் ஆகின்றாள். ஆவி ஆவதும் அல்லாமல், அந்த ஆவியை உய்யக் கொள்ளும் மருந்தும் ஆகின்றாள். அவளால் நான் பெறும் நலங்கள் இவ்வளவாக, பாவியேனாகிய நானோ அவளுக்கு ஒரு புருடன் என்று ஆகின்றேனே அன்றி வேறொன்றும் ஆகவில்லையே]

என்று பாடிய பாசுரத்தில், காதல்நிலையும் மனைவியர் உறவும், உண்மையாயமையுங்கால் உயாவல்ல மேன்மையை ஈடிலாச் சிறப்போடெடுத் தோதினார். உத்தம நங்கையர் மழலையின் மிழற்றும் சொற்கலையால் வாய்த்த பயன் இது. வேதங்களென்ன அவர் வாய்ச்சொல் ஓதியபின், அவர்க்கோ ராளையா யிருக்கத் தரியார் நாயகர். காமனை வெல்லுமாறு இவ்வாறு. தம்முடை நலத்தினால் இவ்விதம் ஆடவர் வெல்லற்கு உதவுகின்ற மாதரையே 'வேளை வென்றமுகத்தியர்' எனக் கம்பர் நாட்டுப்படலத்தில் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

மையலால் மாதர் மிழற்றும் சொற்கலை தெரிந்த செம்மையோர் பின் இனி 'ஆளையா யிருக்கின்றேனே' என அழுங்குவாராக, மெய்யாய நான்மறை நவின்ற முனிவர்நிலை யாவதாயிற் றெனின், கூறுவார் இங்குக் கம்பர்.

ஊக்க முள்ளத் துடைய முனிவரால்
காக்க லாவது காமன்கை வில்லெனும்
வாக்கு மாத்திர மல்லது வல்லியிற்
பூக்கொய் வாள்புரு வக்கடை போதுமே.

[மனத்தின்கண் தவம் செய்யும் ஊக்கம்உடைய முனிவர்களால் மன்மதனது வில்லிற்குத் தம்மை இலக்காகவிடாமல் காத்துக்கொள்ள இயலும் என்று யாவருங்கூறு மிது சொல்லளவே யன்றிச் செயல்வகையில் உண்மையன்று. ஏனெனில், இப்பொழிலின் கொடிகளிலிருந்து பூப்பறிப்பவள் ஒருத்தியினது புருவத்தின் கோடி ஒன்று அம்முனிவர்களது நிறையை அழித்து மையல்விளைவிக்கப் போதியதாவதைக் காணலாமே]

தவத்துறை படிந்த "முனிவர்களே காமன் கணையால் மொய்ம்பழியார்" எனப் பிரிநிலையிற் பகர்வார் சிலர். மற்று, "முனிவர்களுமே காமன் கணையால் மொய்ம்பழிவார்" என, உயர்வுசிறப்பு உம்மையோடு உரைப்பாரும் உளர். இவ்விருவகை எதிரெதிர் நிகழும் வாக்குக்களுக்கும் இந்தச் செய்யுள் இடந்தந்து நிற்கின்றது. "காக்கல் ஆவது காமன் கை வில்" எனப் பிரித்து முன்னைப்பொருள் கொண்டோம். "காக்கலா அது காமன் கை வில்" எனப் பிரிப்பின் பின்னைப்பொருள் எளிதிற்பெறலாகும். இப்பொழுது "தவம்செய்யும் ஊக்கம் மனத்தின்கண் மிகுந்த முனிவர்களாலும் தடுக்க இயலாது" என்னும் இது வாரத்தை அளவு மாத்திரமே அல்லாது உதாரணமும் வேண்டுமாயின், வல்லியில் பூக் கொய்கின்றவர்களுடைய புருவக்கடை போதுமே; இதற்கே ஆற்றாது தளர்கின்ற இம்முனிவர் மன்மதன் வில்லைத் தடுக்க இயலாதவரே என்பதை உரைரலாம்" எனப்பொருள் படும் இச்செய்யுள். ஊக்க முள்ளத்துடைய முனிவரைப்பற்றிய வாக்கு எதுவாயினும் ஆகுக. இருவழியிலும், அறிவினால் மறைப்பொருள் தேர்ந்தவர் காமன்கணைக்குக் குறியாம் நொய்ம்மையர் என்பது இச்செய்யுளின் முடிவு. ஏனெனில் முன், எழுச்சிப் படலத்தில்,

குடையர் குண்டிகை தூக்கினர் குந்திய
நடையர் நாசி புதைத்தகை நாற்றலர்
கடக ளிற்றையுங் காரிகை யாரையும்
அடைய அஞ்சிய அந்தணர் முந்தினர்.

என்று குறித்தபடி, இவர் அஞ்சி அகன்றவரே யன்றி அநங்கனை வென்றுநின்ற வாகைய ரல்லர். மற்று, அழகினால் சொற்கலை தேருமாறு காரிகையார்பின் திரிந்த ஆண்டகையோர், பூவாளிவேளிற் குடைந் தோடாது எதிர்நின்றடர்த்து அவனைப் புறங்கண்டனர். அழகிற்கும் அன்பிற்கும் வயமாகித் தம்மையே துறந்ததால் "இனிச்செல்லாதடா உன்காசு நம்பால்" என மாரனை எள்ளிய இத்தகைமையினோர் மனநிலையின் மகத்துவத்தையே, "பாவியேன் பாவைக்கு ஓர் ஆளே ஆகின்றேனே" என்ற சூளாமணியின் செய்யுளடி சிறக்கக் காட்டுகின்றது. இவ்வகையிற் புருடனும் தனது ஆண்மைக்கு வெள்கும்படி இயக்குகின்ற சூளாமணிப்பாட்டுடைத்தலைவியின் தூய்மையெங்கே, 'பெண்டிரும் ஆண்மை வெஃகிப் பேதுறும் முலையளாய' சிந்தாமணித்தலைவியாம் இலக்கணையின் எழிலெங்கே!

அகப்பொருள் வரலாறு.

பரத்தையிற் பிரிவு

இனிப் பேசநின்ற பிரிவு, தலைவியின் கற்பு நன்கு வெளிப்பட்டு விளங்கி மேம்படுவதற்குக் காரணமென நல்லிசைப் புலவர்களால் புலனெறி வழக்காகப் புனைந்துரைக்கப்பட்ட தலைமகன் பிரிவுகளாறினுங் கடையாய காதற்பிரிவு, அல்லது பரத்தையிற்பிரிவு. அஃதாவது, தன் இன்னுயிர்க் காதலியுடன் கூடிக் காம வின்பரசத்தை நெடிதுண்டு நிறையழிந்த நெஞ்சினனாகிய தலைமகன், இடையிலே பொருள்விழையும் பொதுப்பெண்டிர் புன்னலந்தோய்ந்து புந்திமாறுபட்டுத் தன்மனைவியை விட்டுப்பிரிந்து அவர் மனையில் தங்கியிருத்தலாம்.

56பக்கத் தொடர்ச்சி

தனதுதோழரோடுதினந்தோறும்மாலைப்பொழுதில் உலாவிச்செல்லுந் தலைமகன் ஒருநாள் அந்திநேரத்தில் வீட்டுக்குத்திரும்பிப் பரத்தையர் வீதிவழியே வரும்போது ஆடகத்தமைந்த நாடக்சாலையில்,

நெய்திரள் நரம்பிற் றந்த மழலையி னியன்ற பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமுஞ் செல்ல
மைவிழி மங்கை நல்லாள் மாநடம் புரியக் கண்டான்.

கண்டுவியந்து மகிழ்ந்துநின்றவன் உட்சென்றிருந்துபார்த்து அதை நன்று யனுபவிக்க அவாவியெழுந்த தன்மனத்தை ஒருவாறடக்கி, அவ்விடத்தைவிட்டு அரிதிற் பெயர்ந்தான். பெயர்ந்து அப்பாற் சிறிதுதூரம் போனதும், மற்றோர் மனையகத்தே மாங்குயி லனைய தீங்குரலெடுத்து இன்னிசைமிழற்றாங் கின்னரமென்ன மடமகளொருத்தி பாடக் கேட்டு,

வள்ளுகிர்த் தளிர்க்கை நோவ மாடகம் பற்றி வார்ந்த
கள்ளென நரம்பு வீக்கிக் கண்ணொடு மனமுங் கூட்டி
வெள்ளிய முறுவல்தோன்ற விருந்தென விடருக்கீந்த
தெள்விளிப் பாணித் தீந்தேன் செவிமடுத் தினிது

[மாந்தி

அறிவழிந்து அவசமுற்று அங்கே அவளைச் சாளரத்தின்வழியே பார்த்துக்கொண்டே சிறிதுநேரம் நின்றான். பின்பு, அது அனுமதியின்றி எவரும் புகத்தக்க பொதுமகள் வீடென்று அறிந்தானாதலின், அவ்விசைத்தேனைக் கனியுண்ண விரும்பி, இன்னிசைகேட்டு மயங்கிச்சென்று வேடர்வலையிலே சிக்குண்டழியும் அசுணமென்னத் தன் தோழரோடும் உட்சென்று ஒரு புறத்தே உட்கார்ந்தான். உட்கார்ந்து, அவள் வேற்றுமையின்றி யாழோடு மிடறு கூட்டிப் பாணியி னளந்து பாடிய திறத்தைப்பார்த்து, வியந்து,

கருங்கொடிப் புருவம் ஏறா;
கயனெடுங் கண்ணும் ஆடா ;
அருங்கடி மிடறும் விம்மா
தணிமணி எயிறுந் தோன்றா ;
இருங்கடற் பவளச் செவ்வாய்
திறந்திவள் பாடி னாளோ?
நரம்பொடு வீணை நாவின்
நவின்றதோ ? என்று நைந்தான்.

இவ்வாறு வியந்து நயந்து நைந்து செவிப்புலனால் இசையமுதையுண்டு இன்புற்றுக் களித்தவன் அக்கணிகைமங்கையின் கவினலத்தைக் கண்ணாற் பருகிக் காமப்பித்தேறிப் பொழுதின்போக்கை யுணராது நெடுநேரம் அங்கேதங்கிப் பின் அரிதின் அவ்விடம்விட்டெழுந்து யானையுண்ட விளங்கனி போன்ற வெற்றுடம்போடு வீட்டுக்கு மீண்டான்.

அன்று அவன்கேட்ட கானரஸமும், கண்ட கணிகையுருவமும் தன் காதையுங் கண்ணையும் விட்டகலாது நின்று உள்ளத்திலோர் புத்துணர்ச்சியையும் கிளர்ச்சியையும் உண்டாக்க, அன்றிரவெல்லாம் துயில்கொளாது தூமலரமளியில் மனவமைதியின்றி மாழாந்து கிடந்தான். கிடந்தவன் மறுநாள்பகலெல்லாம் மனம் பிறிதொன்றையும் நாடாது பேதுற்று அறிவோடு நிறை ஓர்ப்பென்னும் உத்தமகுணங்களும் ஒருங்கே தன்னைவிட்டொழிய அந்திநேரத்தில் முன்னாள் தான் பாடக்கண்ட பரத்தைவீட்டை முன்னிச்சென்றான். அன்றும் அவள் முன்போலவே பாடிக்கொண்டிருக்கக் கண்டு, உடனே உள்ளேசென்று பாட்டு முடியுமட்டும் உட்கார்ந்திருந்து, பிறகு தன் வீட்டுக்குத் திரும்பினான். முன்னாள் வந்த முருகிற் செவ்வியான் மறுநாளும் தன்னகத்தை நாடி வரக்கண்ட மாயக் கணிகை அன்று முன்னிலும் உருக்கமாகவும், இனிமையாகவும், அழகாகவும் பாடினாள்.

இவ்வாறே தினந்தோறுஞ் சென்று அவளீந்த இசைத்தேனையுண்டு களிப்புற்றவன் ஒருநாள் அவளுடன் காமமதுவைக் கலந்துண்ண விரும்பி, வழக்கம்போல் பாட்டு முடிந்தவுடன் எழுந்து செல்லாமல் காலந்தாழ்த்திருப்ப,

அவ்வயினக் குறிப்பதனை உடனுணர்ந்த அன்னாள்
செவ்விமுக முன்னியவன் திருவடியின் இறைஞ்சா
வெவ்விய நெடுங்கணயில் வீசியயல் பாரா
நவ்விபி னொதுங்கி இறைநாணி அயல்நின்றே

"எம்பெருமான் இவ்வாறு எங்குடிலிடைப் போதவுளது எம்முழையோர் புண்ணியமதன்றோ?" என்று கொஞ்சுகிளிக் கெஞ்சுமொழிக் கிஞ்சுகவாயால் முகமன்கூறி, உள்ளழைத்துச்சென்று ஓரணை யிருத்தி நானவித முறபோகமும் நலமுற அளித்து மகிழ்வித்து அவனைத் தன்வசப்படுத்தாள்.

அன்றுமுதல் அவன் மோகவலையி லகப்பட்டு அடிக்கடி அவள்மனைக் கேகி அவளுடன் கூடிக் களித்தின்புற்றிருந்து நேரஞ்சென்று தன் வீட்டுக்குத் திரும்புவான்; சில நாள் இராமுழுதும் அங்கே தங்கி விடியற்காலத்தில் வீட்டுக்கு மீள்வான். இவ்வாறு அவன் ஆரம்பத்தில் அருகியும், பிறகு அடிக்கடியும், அப்பால் நாள்தோறும் அந்திநேரத்தில் வீட்டைவிட்டு வெளிச்சென்று வெகுநேரந் தங்கி மீள்வதையும், முன்போல் தனித்துத் தன்னுடனிருந்து அளவளாவுதலை நச்சாமையையும், பண்டைய விருப்பங்களிற் பற்றொழிந்து வெறுப்புற்றதையும், மற்றுஞ் சில மாறுபடுகளையுங்கொண்டு அவன் புறவொழுக்கத்தை அனுமானித்த தலைவி ஒவ்வோர் சமயம் அவற்றை அவனுக்கெடுத்துக் கூறிக் காரணம் என்னோவென்று வினவியபோது, நம்பத்தக்கனவுந் தகாதனவுமான பொய்ச்சமாதானம் பல புகன்று பொருக்கென அவன் அவ்விடம் விட்டகல்வான். இப்படிக் கனுமானித் தையுற்ற தலைவி சிலதியர்வாயிலாகத் தன் செவிக்கெட்டிய ஊராருரைத்த அலர்மொழியால் அவனது பரத்தைமையை உண்மைதானென்றுணர்ந்தாள். உணர்ந்தும் அதை அவள் தனதுயிரனைய பாங்கிக்கும் வெளிப்படுத்தாமல், உள்ளம் நொந்து வருந்தி நைந்துருகி நாளுக்குநாள் மெலிவாளாயினாள். தனித்திருந்து, அவன்

மருப்பார் வனமுலைமங்கையர் சேரியில் வைகலுந்தன்
விருப்பால் உறைநல மேவிய காதலர் வேட்கைவெந்தீ
உருப்பால் உருகிய ஆவியும்பாவிஉடம்புங்கொண்டே
இருப்பார் பிறரு முண்டோ நெஞ்சமேயிங் கெனை
[யொழித்தே

என்று தன்னெஞ்சொடு கூறி அழுதிரங்குவாள்; அடிசி லமைத்துவைத்துக் காத்திருந்து அவன் வாராமையால்,

அலையேற்றிய இப்பிவைத்தடுப்பாக, அரும்பவிழ்தேன்
உலையேற்றியாங்கின்னித்திலம்பெய்துநான்ஒண்டு
கலையேற்றிய நுதலாரடுஞ்சோறிடக்கைக்கமலத்[திலார்
திலையேற்று வெம்பசி இன்றிலையேகம் இறைவருக்கே

என்று வாடி வருந்துவான். இவ்வாறு தலைமகள் வருந்தி வாடி மெலியக்கண்ட பாங்கி உற்றதென்னென்று ஒருநாள் அவளைக்கேட்க, உயிர்ப்பாங்கிக்கினி ஒளிக்கலாகாதென்று அவள்

வேலிருக்கும் விழிமாதேவினையேனை விட்டொழிந்தோ
பாலிருக்கப்புளிங்காடி உண்பாரிற் பரத்தையரில்
வாலிருக்குஞ்சிறை மென்பேடொரீஇ அனம்மாமலரின்
மேலிருக்குஞ் சங்கம்புல் வயலூரர் விரும்பினரே

என்று உண்மையை உரைத்தாள். அதுகேட்டதோழி அவளை மனந்தேற்றி ஆற்றுவாளாய், "பகல் நீங்கப் பொலிவிழந்த அரவிந்த மலர்முகத்தாய், முகமலர்ந்து விருந்தூட்டி இல்லறங்கள் இனிதாற்றி, மனைவாழுங் குலமகளிர் கற்பினுக் கழகாமோ, தனைமணந்த கொழுநன்றன் குறையெடுத்துப் புறங்கூறல்?

மாலைக் குமுதமலர்தரு தேனுண்டவண்டுவரக்
காலைக்கமலங் குவிந்ததுவோ அருங் கற்பினுக்கந்
கேலக்கருங்குழல் மங்கையர் காதலரென் செய்யினும்
சீலத்தியல்புகுன்றார்; வருந்தேல் மெய்த்திருமகளே.

என்று புகலக்கேட்டு, அதுவே நெறியென்று கடைப்பிடித்து உள்ளத்தில் மூண்டெழுந்த புலவியை ஒருவாறவித்தடக்கிக் கணவனிடத்து அன்புகாட்டிச் செய்கடன்களைச் செய்துவந்தாள்.

ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன் ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்த நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும்
விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பின் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0–12–0. வி. பி. செலவு வேறு

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்ஸி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரு 1-0-0 தபால் செலவு வேறு.

மானேஜர்; கலா நிலயம்.

11. வேளாளர் தெரு. புரசை, சென்னை.

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றுமுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ள தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுகளையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

„ சாதாரண கட்டடம் „ 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்

நல்லதாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணியாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

பாலகாண்டம்	...	... ரூ	5	0
அயோத்தியாகாண்டம்		...	5	0
ஆரணியகாண்டம் ...		...	4	0
கிட்கிந்தாகாண்டம்		...	4	8
சுந்தரகாண்டம்	...	...	5	0

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைவாக்கம், சென்னை.

Our Publications.

Kamban's Kosala.

By **T. N.** Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville** and **Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணா 4.

உலக அதியசம். விலை அணா 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co.,

Nungambakam, Madras.

வர்த்தமானம்

மோல்மீன் முனிசிபல் கமிட்டியார், அந்தவூரில் குதிரைப்பந்தயம் நடப்பதற்கு அநுமதி கொடுக்காத வகைகளைத் தேடவேண்டுமென்று தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

* * *

ஸ்ரீ மீனாக்ஷி சங்கம், கொ லெக்ஷ்மிபுரம்:—இச்சங்கத்தின் நான்காவதாண்டு ஆறுவது மாதக்கூட்டம், 23-8-29௳ மாலை நாலுமணிக்குத் திருநெல்வேலித் திருவாளர், பொ. திருகூடசுந்தரனார், M. A, B. L, அவர்கள் தலைமையில் நடைபெற்றதெனக்காரியதரிசி N. S A. R. அருணாசலம் செட்டியார் தெரிவிக்கின்றார்.

* * *

இறக்குமதியாகும் அன்னியத் துணிகளின்மேல் கடுமையான வரியை விதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமெனக் கவர்ன்மென்டைப் பம்பாய்க் கார்ப்பொரேஷன் வேண்டிக்கொள்ள ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது. இவ்விஷயம் கார்ப்பொரேஷன்கூட்டத்தில்வாதிக்கப்பட்டபோது, ஆலை முதலாளிகள் சமக்கொன்றும் நல்லது செய்வதில்லையாகையால் அவர்களுக்கு இலாபகரமான இத்தீர்மானம் நிறைவேறப் படாதென்று தொழிற் கட்சிப் பிரதிநிதிகள் எதிர்த்தார்கள் என்றறிகின்றோம்.

* * *

வேதாரண்யத்தில் கூடிய 33 வது தமிழ் மாகாண மகாநாட்டில் ஸ்ரீமான் ஸி. மருதவாணம் பிள்ளை அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசுகையில், "சிறிது காலமாகக் காங்கிரஸின்வேலை சோர்ந்திருக்கின்றதென்றும், அதற்குக் காரணம் இன்னதென்று திட்டமாய்ச்சொல்ல இயலவில்லையென்றும், எனினும் ஸைமன்கமிஷன் பகிஷ்காரத்தில் காங்கிரஸ் செய்த வேலையிலிருந்து வேண்டுமெனின் அது தீவிரமாக எதனையும் செய்ய வல்லதென்பது தெரிகின்றதென்றும், ஆனால் நேருகமிட்டி செய்துள்ள சிபார்சுகளைச் சனங்களனைவரும் ஆதரிக்கும்படி நிர்மாணவேலைகள் செய்யாமல் காங்கிரஸ் வீண்காலம் கழித்துவிட்டதென்றும், நாமே காங்கிரஸ் என்றஎண்ணம் பொதுஜனங்கள் மனத்தில் அழுந்த வேண்டியதற்குரிய பிரசாரங்கள் செய்வது மிகவும் அவசியமென்றும், காங்கிரஸ் தன்னுடைய முயற்சியினால் ஜஸ்டிஸ் கட்சியினரைத் தோற்கடித்து விட்டதானாலும் சட்டசபைகளில் போதுமான மெஜாரிடி யில்லாததால் ஜனங்களுடைய நன்மையிலேயே கருத்துள்ள மந்திரிகள்தவிர மற்றவர்கள் அப்பதவிக்கு வராதபடி தடுக்கமுடியாமற் போயிற்றென்றும், இருக்கின்ற மந்திரிகள் தம் கடமையைச் சரிவரச் செய்யாததால் தான் சென்னைக் கப்பம் வஜாசெய்யப்பட்ட போதிலும் ஜனங்களுக்கு விசேஷ நன்மைகளாவது வரியின் குறைவாவது ஏற்படவில்லை என்றும், நிர்மாண வேலையில் காங்கிரஸ் கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டுமென்றும், ஆனால் சட்டசபை வேலையையுங் கைக்கொண்டிருப்பது இந்நிர்மாண வேலைக்கு இடையூறாயிருக்கின்றதெனச் சிலதிறத்தவர் சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கது அன்று என்றும், காங்கிரஸின் ஊக்கத்தால் கதரின்செல்வாக்கு வலிவடைந்து வருகின்ற இது பாராட்டத்தக்கதென்றும், ஒத்துழையாமையின் வன்மையைத் தன் செய்கையால் ரூபித்த ஸர்தார் வல்லபாய் படேல் மகாநாட்டின் தலைவராகக் கிடைத்தது பாக்கியமே என்றும் கூறினார்.

இதன்பின் மகாநாட்டுத் தலைவர் ஸர்தார் வல்லபாய் படேல் அவர்கள், "போதுமான அளவு இம்மாகாணம் ஹிந்திபாஷையைப் பயின்றிராததால் தான் ஆங்கிலத்தில் பேசவேண்டியிருப்பதற்கு வருந்துவதாகவும், தனக்குக் காங்கிரஸ் விதித்த வேலையைக் குடியானவர்களது நன்மையின் பொருட்டுச் செய்யத்தெரியுமேயன்றிக் கட்சிவாதங்கள் முதலியன செய்யுந் திறமை இல்லையென்றும், இவ்வருடத்திற்குள் நேருகமிட்டி யாதாஸ்து அங்கீகரிக்கப்படாவிட்டால் காங்கிரஸ் விதிப்படி செய்யத் தயாராயிருக்கவேண்டுமென்றும், ஒத்துழையாமையே தக்கமார்க்கமென்றும், சட்டசபையில் காங்கிரஸ் கலந்துகொள்வதினால் நிர்மாண வேலை சரிவர நடைபெறாமல் போகின்றதென்பதற்குச் சந்தேகம் இல்லையென்றும், தீண்டாமையையும் மதுவையும் விலக்கி எல்லா வகுப்பினர்களுக்குள்ளும் ஒற்றுமை உண்டாகும்படி செய்து, கதரின் பெருமையைக் கைவிடாமல் காத்து, நிலவரிமுறைகள் நேர்மையடைவதற்குரிய வகையில் முயன்று எல்லாரும் காங்கிரஸின் நிர்மாண வேலையில் உழைக்கவேண்டுமென்றும், வீண்பேச்சு ஓயாமற் பேசிப்பேசிப் பலபான தீர்மானங்களையும் கண்டனங்களையும் நிறைவேற்றிவிட்டுச் செய்கையில் ஒன்றுங்காட்டாமல் இப்பொழுது இருப்பதுபோல் இருந்தால் பயனில்லையென்றும் கூறிப், பலாத்காரமற்ற ஒத்துழையாமையைத்தவிர வேறுசிறந்த வழியில்லை என்பதையும் எடுத்துக் காட்டினார்.

இந்த மாகாண மகாநாட்டில் முக்கியமாக வாதம் செய்யப்பட்டது, வருகிற லாகூர் காங்கிரஸிற்குமுன் பிரிட்டிஷ் பார்லிமெண்டார், சர்வகட்சி திட்டத்தை அங்கீகரிக்காவிட்டால் "சுயராஜ்யம்" என்பதைப் "பூரண சுயேச்சை" என்று தன் கொள்கையைக் காங்கிரஸ் மாற்றிக்கொள்ளவேண்டுமென்று லாகூர் காங்கிரஸிற்கு இம்மகாநாடு சிபார்சு செய்யவேண்டும், எனும் தீர்மானமேயாகும். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியில் இந்தத்தீர்மானம் அதிகப்படி ஓட்டுமூன்றினால் நிறைவேறியது. ஆனால் மகாநாட்டில் இது ஸ்ரீமான் ஸி. ன். முத்துரங்க முதலியாரவர்களால் பிரேரேபிக்கப் பட்டபோது, ஸ்ரீமான்களான, ஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார், ஸ். சத்தியமூர்த்தி, ஹாஜி மௌலானா சாகிப், அண்ணாமலைப்பிள்ளை, வெங்கடாத்ரி, முதலானவர்கள் அத்தீர்மானத்தை ஆதரித்தும், ஸ்ரீமான்களான எ. ரங்கசுவாமி ஐயங்கார், டாந்துலு ஐயர், N. S. வரதாசாரியார், குமாரசாமி ராஜா, முதலானவர்கள் எதிர்த்தும் பேசியபின், அக்கிராசனர் நிர்மாண வேலையை நினைக்காமல் கொள்கைகளைப்பற்றி வாதிக்கும் இந்தத் தீர்மானத்தில் தனக்குச் சிரத்தை இல்லையென்று தெரிவித்து ஓட்டிற்குவிடவும், 65 பிரதிநிதிகள் அதற்குச் சார்பாகவும், 175 பிரதிநிதிகள் அதற்கு விரோதமாகவும் ஓட்டுக் கொடுத்ததால் அது நிறைவேறவில்லை.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

189070

11, VELLALA STREET,

Purasawalkam MADRAS.

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A .B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஒதற்பிரவு வரை—K. இராமரத்நம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நீஷேன் எபிகுயூரன் ஜீனோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலானோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தரனார் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

காலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால் செலவு உள்பட:—

பையிண்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு ரூ 9—8—0
ஆப்லெதர் கில்டுபயிண்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு ரூ 11—8—0
காலிகோ பயிண்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L (Editor)